5-23 5- 23


# காஞ்சி

நிறுவனர்:

அண்ணாதுரை

29-12-68

விலை 20 காசு




# மத்திய, மாநில அதிகாரங்கள்?

—நா. சேதுநாதன்—

அரசியல் சாசனத்தை உண்டாக்கிய டாக்டர் அம்பேத்கார் போன்றவர்கள் குடியாட்சியில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட நிறுவனங்களாக இருப்பினும்கூட ஒரு அமைப்பு இன்னொரு அமைப்பைத் தனக்கு அடிபணியவைக்கும் சக்திகளைக் கட்டுப்படுத்தி ஒன்றின்மேல் மற்றொன்று ஒரு வலுவான கண்காணிப்பை செலுத்தும்வண்ணம் அச்சாசனத்தின் ஷரத்துக்களை அமைத்திருக்கிறார்கள். இருந்தும்கூட அது இன்னும் குறையுள்ளதாகவே உள்ளது.

இந்தியக் குடியரசு கூட்டமைப்பு என அரசியற் சாசனம் அறிவிக்கிறது. அமெரிக்க ஐக்கிய நாடுகள், சுவிட்சர்லாந்து, கானடா, சோவியத்யூனியன் போன்ற நாடுகளும் இவ்வடிப்படைத் தத்துவத்தை ஏற்றுக்கொண்ட நாடுகளாகும். மாறாக, இங்கிலாந்து, ஸ்வீடன், பிரான்சு போன்றவை ஒன்றிய மைய ஆட்சி அடிப்படையை ஏற்றுக் கொண்டுள்ளன. நாடுகளில் மைய அரசே எல்லா அதிகாரங்களையும் தன்னுள் அடக்கி வைத்திருக்கிறது. இந்நாடுகளில் மைய அரசின் அதிகாரம், கொடிகட்டிப் பறந்த முடிமன்னர்களின் அதிகாரம் போன்றதாகும். அது ஆட்சித்துறை, நீதித்துறை, ஆகிய பல துறைகளிலும் எச்சட்டத்தினையும் இயற்றும் அதிகாரம் நிறைந்துள்ளது. இந்தியாவைப் போன்ற மிகப் பெரிய நாடுகளில் இந்த ஆட்சி அமைப்பு அரசியல் சாசனத்திலேயே ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தால், தமிழ்நாடு போன்ற மாநில அரசுகள் மத்திய அரசாகிய கதிரவனின் ஒளிபெற்று மிளிரும் 'எடுபிடி' களாகவே இருந்திருக்கும். ஆனால் எழுதப்படாத அரசியல் சாசனமே இல்லாத இங்கிலாந்து சிறந்த குடியாட்சி முறைக்கு இலக்காக விளங்குவதையும், கூட்டாட்சி முறையைக் கொள்கையளவில் ஏற்றுக்கொண்டுள்ள சோவியத்யூனியன் ஒரு சர்வாதிகாரியாக, அடிப்படை மனித உரிமைகளையும் மதிக்காது அரசோச்சி வருவதையும் உணர வேண்டும்.

[illegible]டாட்சி முறை என்பது என்ன பல மொழி, மதம் இனங்கள் கொண்ட மக்கட் தொகுப்பை யுடைய பல மாநிலங்கள் தாங்களாகவே பொது நன்மைகருதி ஒரு கூட்டமைப்பை உண்டாக்கிக் கொள்ளும் அமைப்பாகும். மத்திய அரசுக்கு மிகையாக அதிகாரங்கள் இன்னும் உண்டென்றாலும்கூட ஒன்றிய மைய ஆட்சியின் அரசியற் பரிபாலனம் செய்யும் நாடாளுமன்றத்தில் அரசனைப் போன்று அது எதேச்சாதிகாரம் செலுத்த இயலாது. ஆண்டான் அடிமை என்ற வேறுபாடு இங்கு இல்லை. ஒன்று மற்றொன்றின் உரிமைகளில் தலையிடாமலிருக்க, இக்கூட்டங்கங்களுக்கும், மைய அமைப்புக்கும் தங்கள் கரங்கள் எந்த அளவு நீளலாம் என்பதை அரசியற் சாசனமே வலியுறுத்துகிறது. இவ்வடிப்படையில் மாநில அரசுக்கென்று சில அடிப்படை உரிமைகளும், சலுகைகளும் உள. இவைகளை மைய அரசு ஏதும் செய்ய முடியாது.

இந்த பின்னணியில் நாம் மாநிலங்களுக்கு 'அதிக அதிகாரம் வேண்டும்' என்னும் அறிஞர் அண்ணாவின் கொள்கையை நோக்க வேண்டும்.

அமெரிக்காவிலுள்ள மாநிலங்கள், உதாரணமாக, மைய அரசைப் போன்று பலம் படைத்தவையாக உள்ளன. இந்தியாவில் மைய அரசு பெரும்பான்மையால் கொண்டுவரும் சில சட்டங்களை மாநிலங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும், அன்றி மாநிலங்களின் சட்டசபைச் சட்டங்கள் ஒரு குறிப்பிட்ட பிரச்சினையின் மீது மைய அரசு நாடாளுமன்றச் சட்டத்திற்குமுரணாகப்போகுமாயின் இறுதியில் மைய அரசின் கையே ஓங்கி நிற்க வேண்டும் என அரசியற் சாசனம் புகலுகிறது. இன்னும் சில விஷயங்களில் மாநில அரசு தன் சட்டசபையில் சட்டங்கள் இயற்றவே அனுமதியளிக்கப்படுவதில்லை. உதாரணமாக இந்தியாவுக்கென்று குடியுரிமை ஒன்றே ஒன்றுதான்; இந்தியக் குடியுரிமை. ஆனால் அமெரிக்காவில் இக்குடியுரிமை மாநிலத்திற்கு மாநிலம் வேறுபடுகிறது. மாநிலங்கள் இது குறித்துச் சட்டங்கள் இயற்றலாம். இந்தியாவில் எந்த மாநிலமும் இதுபற்றிச் சட்டங்கள் இயற்ற அனுமதிக்கப்படுவதில்லை.

அமெரிக்காவில் ஒரு சில மாநிலங்கள் நீக்ரோக்களைப்பற்றி வரையறுக்கையில், தங்கள் சாசனங்களில் எட்டில் ஒரு பாகம் ஆப்பிரிக்கக்

(4-ம் பக்கம் பார்க்க)

# காங்கிரஸ் புலியிடம் சிக்காதீர்!

கதை ஒன்று தெரியுமல்லவா? வலிலிழந்து பாய்ந்து தாக்கிட இயலாத நிலையிலிருந்த கிழட்புலிசாதுவேடம் போட்டுக்கொண்டு பொன்காப்பு ஒன்றைக் காட்டி வழியே செல்பவர்களை "தானம் வாங்கிக் கொள்ள வருக" என்று அழைத்து அருகே வந்தவர்களைக் கொன்று தின்றதாம்.

1947-ல் சுயராஜ்யத்துடன் 1600 கோடி ரூபாய் இருப்பும் வைத்து வெள்ளைக்காரன் காங்கிரஸ் கட்சியிடம் நாட்டைத்தந்து சென்றான். இன்று இருப்பு இருக்குமிடம் தெரியாமல் கரைந்து இந்தியாவின்மீது 16 ஆயிரம் கோடி ரூபாய் கடன் பற்று ஏறியிருக்கிறது. வட்டி கட்டவே திண்டாட்டம். இருபது ஆண்டு காங்கிரஸ் ஆட்சியிலே கண்ட பலன் இது.

நாட்டின் பொருளாதார இயந்திரமே இந்தியாவின் 75 பெரிய குடும்பங்களிடம் சிக்கிவிட்டிருக்கிறது என்று நிபுணர்கள் கூறுகிறார்கள். பாராளுமன்றத்தில் பேசுகிறார்கள். பத்திரிகைகள் எழுதுகின்றன.

தமிழ் நாட்டில்; கழக அரசு; அமைந்தது—தமிழ் நாடு என்ற பெயர் வந்தது இந்தி ஆதிக்கம் ஒழிந்தது—இந்தி ஆதிக்கத்தை மீண்டும் புகுத்த காங்கிரஸ் துடியாய்த் துடிக்கிறது.

"நாகர்கோயிலில் காமராஜர் நிற்கிறார்" என்று மயக்குமொழி பேசி ஓட்டு வாங்கிவிட்டால் மீண்டும் இந்தி ஆதிக்கம் வரும்.

ஜனநாயகம் தழைத்திட—
தமிழ் தழைத்திட—
மக்கள் வாழ்வு மலர்ந்திட—
மாநிலங்களின் உரிமைகள் பெருகிட—

இந்தத் தேர்தலில் டாக்டர் மத்தியாசுக்கு வாக்களித்து வெற்றி தேடித்தரக் கேட்டுக்கொள்கிறேன்.

—முதலமைச்சர் அண்ணா

# காஞ்சி

நிறுவனர்: அண்ணாதுரை

ஆண்டு சந்தா ரூ. 10 ஆறுமாதம் ரூ. 5

மலர் 5 29—12—68 இதழ் 23


## புதுமைகளை வரவேற்போம்!

நிலா மண்டலத்திலுள்ள அற்புதங்களையும், அதனை ஆக்கத்திறத்துக்குப் பயன்படுத்திக்கொள்ள முடியுமா என்பதனையும் கண்டறியும் மகத்தானதொரு முயற்சியில் இந்த கிழமை அமெரிக்கா பெரியதொரு வெற்றியை அடைந்திருக்கிறது.

1958 முதலே இது தொடர்பாக அமெரிக்காவும், ரஷ்யாவும் போட்டிபோட்டுக் கொண்டு முயன்று வந்தாலும், இதுவரையில் நிலா மண்டலம் பற்றிய அனைத்து முயற்சிகளிலும் ரஷ்யாவே வெற்றியடைந்து வந்திருக்கிறது. என்றாலும், அந்த மண்டலத்துக்கு, உயிருடன் இதுவரையில் நாய்களும் எலிகளுமே சென்று வந்த நிலைமையிலிருந்து மனிதர்களே சென்று தன்மைகளை நேரில் அறிந்துவரும் முயற்சி நடைபெறவில்லை. இந்த முயற்சியில் இப்போது அமெரிக்காவின் "அப்பாலோ-8" என்ற விண்வெளிக்கலம் வெற்றிப் பாதையில், அடியெடுத்து வைத்துவிட்டிருக்கிறது.

இதுவரையில் விஞ்ஞானப் புதுமைகள் என்று கருதி மதிக்கப்பட்டவைகளைவிட, இந்த முயற்சியும் சாதனையும் தலையாயதும், மகத்தானதுமாகும்.

பூமியிலிருந்து சுமார் இரண்டேகால் லட்சம் மைல்களுக்கப்பாலுள்ள நிலா மண்டலத்துக்கு அமெரிக்காவின் முப்படைகளிலுள்ளபிராங்க்போர்மென், ஜேம்ஸ் லோவல், வில்லியம் ஆண்டர்ஸ் ஆகிய மூவரும் கடந்த சனிக்கிழமையன்று பூமியைவிட்டுப் புறப்பட்டு, செவ்வாயன்று பகல் நிலா மண்டலத்தையடைந்து, நிலாவுக்கு சுமார் 60 மைல்கள் எட்டவிருந்து நிலா மண்டலம் தொடர்பான ஆய்வுகளை நிகழ்த்தி இருக்கிறார்கள்.

நிலா மண்டலம் பழுப்பு நிறமாயிருப்பதாகவும், மலைகளும், எரிமலைக் குன்றுகளும், பள்ளத்தாக்குகளுமிருப்பதாகவும் கண்டு, அதனைப் படமெடுத்தும் அனுப்பி இருக்கிறார்கள். வானவெளியிலிருந்து—சந்திர மண்டலத்துக்கு அண்மையிலிருந்து பூ மண்டலத்தையும் புகைப்படமெடுத்து அனுப்பி இருக்கிறார்கள்.

மனிதர்கள் வாசஞ்செய்யத்தக்கது என்று நம்ப முடியவில்லை என்ற முடிவின் அருகிலும் அவர்கள் வந்திருப்பதாகத் தெரிந்தாலும், அவைபற்றியெல்லாம் மேலும் மேலும் தீவிரமான ஆராய்ச்சியிலீடுபடக்கூடும்.

நிலா மண்டலத்தை ஒட்டியுள்ள இருட்டுப் பகுதிக்கு அவர்கள் சென்றிருந்த ஒரு அரைமணி நேரம் வரையில் பூமியுடன் அவர்கள் கொண்டிருந்ததொடர்பு துண்டிக்கப்பட்டுப் போனபோது, உலக மக்கள் அனைவருக்கும் வியர்த்துக் கொட்டியிருக்கக்கூடும், கண்களில் நீர் முட்டி இருக்கக்கூடும். தொடர்புடையவர்களின் மனைவியர், உறவினர்களின் நிலைபற்றி எழுதி விளக்க முடியாது. ஆயினும் அரைமணி கழித்து மீண்டும் டெலிவிஷனில் தோற்றமளித்தபோது, கவலைகள் நீங்கி, சாதனையின் பெருமிதங்கள் முகிழ்த்திருக்கின்றன. தொடர்ந்து நிலாமண்டலம் பற்றிய புகைப் படங்கள், வரத்தொடங்கியதும், முயற்சியிலீடுபட்டிருந்தவர்கள் அகமும் முகமும் பொங்கிப் பூரித்திருக்கும், அதுபோலவே உலக மக்கள் அனைவரது இதயமும் மகிழ்ந்திருக்கிறது.

மனிதனின் ஆற்றலுக்கு எல்லை வரையறுத்துவிட முடியாது என்பதற்கான எடுத்துக்காட்டுக்களுள் தலையாயதான இச்சாதனையை விளைவித்துக்காட்ட அமெரிக்கா, எடுத்துக்கொண்டுள்ள முயற்சி பாராட்டத் தக்கதாகும்.

இதனை விளைவித்துக்காட்ட, மனித உயிர்களையே பணயம் வைக்கவும் அது தன்னைத் தயார்ப்படுத்திக் கொண்டுவிட்டது. ஏதேனும் ஒரு கட்டத்தில் இந்த முயற்சி நடைபெற்றே தீரவேண்டும் என்ற நிலையில் மேற்கொண்ட திட்டமானது, அடுத்த ஆண்டில் நிலா உலகில் மனிதர்களையே கொண்டுபோய் இறக்கி, குடும்பம் நடத்துகிறீர்களா? என்று கேட்க முடிந்த சாதனையையடைந்திருக்கிறது.

சாதாரணமான இந்த சாதனைபற்றி ஆகா! ஓகோ! என்று தன்னை மறந்து பாராட்டிக்கொண்டிருக்கும் அதே நேரத்தில், அதனை நிகழ்த்தியவர் பட்டபாட்டையும் நாம் நினைவு கூற வேண்டியவர்களாக விருக்கிறோம்.

இதுவரையில், வானவெளி வீரர்கள் சந்தித்த பேராபத்துக்களைக்காட்டிலும், அவர்கள் பூமண்டலத்துக்குத்திரும்பி, வாயு மண்டலத்தைக் கடக்கும்போது, இன்னும் பெரிய ஆபத்தைச்சந்திக்க வேண்டியவர்களாக இருப்பார்கள் என்று தரப்பட்டிருக்கின்ற அறிவிப்பானது, நம்மையும் மறந்து 'ஐயோ!' என்று அலறச்செய்துவிடுகிறது.

இந்த இதழ், அச்சாகிக் கொண்டிருக்கும் நேரத்தில், வானவெளி வீரர்கள் மூவரும் பூமண்டலத்தை நோக்கித் திரும்பிக் கொண்டிருப்பார்கள். உங்கள் கரங்களில் படிக்கக் கிடைக்கும்போது அநேகமாக பூமியை அடைந்துவிடக்கூடும். அதோடு அது தொடர்பான செய்திகளும் நாளேடுகளில் வந்திருக்கக் கூடும்.

விண்வெளி வீரர்களை, உயிருடன் மீட்டுவிட முடியும் என்ற நம்பிக்கையில்தான் அமெரிக்கா, பிரமாண்டமான வரவேற்பு ஏற்பாடுகளைச் செய்திருக்கிறது.

அந்த நம்பிக்கை, உலகமக்கள் அனைவருக்கும் இருப்பதைப்போலவே, நமக்குமிருக்கிறது.

அந்த நம்பிக்கையுடனேயே, அவர்கள் முயற்சியைப் பாராட்டுகிறோம்! சாதனையைப் பாராட்டுகிறோம். இதே சமயம், இதுதொடர்பான கருத்துக்களை அஞ்சத்தக்க அளவுக்கு வெளியிட்டுக்கொண்டிருக்கும் ரஷ்யாவைப்பற்றி நாம் கவலைப்படத் தேவையில்லை. ரஷ்யாவின் கண்ணோட்டத்தில் அதன் கருத்து அப்படி! என்று நாம், மேலே போகலாம்! ஏனென்றால், நாளை ரஷ்யாவும் இந்த முயற்சியிலீடுபடப்போவது உலகம் அறிந்த ஒன்றுதான்!

ஆனால், இந்த விண்வெளிப்பயணம், ராமாயணக் கதையின்மீது புதியதொரு 'பக்தி'யை உண்டாக்குகிறது! என்ற கருத்துதான் சிரிப்பையுண்டாக்குகிறது!

இந்த இந்திய நாடு, இன்னமும் எவ்வளவு தூரம் மேலே ஏறித் தீரவேண்டிய நிலையிலிருக்கிறது என்று எண்ணிப்பார்க்கத்தான் இதுபோன்ற செய்திகள் பயன்படமுடியும். அல்லாமல் நிலாவுலகை, மனிதன் சென்று வலம் வரும் சேதியோடு, ராமாயணகாதையில் புஷ்பவிமானத்தில் பறந்த சேதி ஒட்டப்படுவதன் மூலம் அந்த அற்புதத்தின் உயர்வையே, கீழே தள்ளிவிட நினைப்பவர்கள் யாரேனும் இருக்கமுடியுமா? இந்தியா இப்படித்தான்! என்று ஒதுக்குவோம்!

நிலவுலகு கண்டு, பேராபத்துக்கள் பலவற்றிலிருந்து மீண்டு வெற்றி வீரர்களாய் மீள்வோரை வாயார வாழ்த்தி, மனதாரப் பாராட்டுவோம்!

★

---

2-ம் பக்கத் தொடர்ச்சி

குருதி உள்ளவர்கள் நீக்ரோவினர் என்றன. ஆனால் வேறு சில கால் பாகம் எனவும், இன்னும் சில வெள்ளையர்கள் தவிர அனைவரும் நீக்ரோவியராகவே கருதப்படுவர் எனவும் கூறுகின்றன. பிரச்சினை ஒருபுறமிருக்க மாநிலங்களின் அதிகாரத்தையே நாம் கருத்தில் கொள்ள வேண்டும்.

அரசியற் சாசனம்மையஅரசுக்கும் மாநில அரசுக்கும் அதன் அதிகாரங்களை வரையறுத்துள்ளது. இதனை அச்சாசனம் மூன்று பிரிவாகப் பிரித்துள்ளது; (1) மைய அரசின் பட்டியல் (2) மாநில அரசுப்பட்டியல் (3) பொதுப்பட்டியல். இவைகளில் மைய அரசுக்கு தபால் தந்தி இலாகா போன்று 97 பணிகளை ஒதுக்கியுள்ளது. மாநிலத்திற்கு 66 மட்டுமே ஒதுக்கியுள்ளது. பொதுப் பட்டியலில் 47பணிகள்மொத்தமாக ஒதுக்கப்பட்டுள்ளன. இவைகளில் மைய அரசுக்கு ஒதுக்கப்பட்டுள்ள வருமானம் வரும் பலதுறைகள் எண்ணிக்கையிலும், அவைகளின் தன்மையிலும் (31 பணிகள்) மிக அதிகமாக உள்ளன, அஞ்சல் துறை போன்றவைகளில் நாடு முழுமையும் ஒரேவகையான சீர்மை வேண்டும் என்று வலுவான ஒரு மைய அரசின் கைகளில் இவை இருக்கவேண்டும் என்று—காரணம் காட்டினாலும்கூட, மைய அரசின்பால் அரசியல் சாசனம் தாராளமாகச் சலுகை காட்டியுள்ளது என்பது உண்மை. இப்படிப்பட்ட நிலையின் விளைவுகளை நாம் ஆராயவேண்டும். அதுமட்டுமன்றிப் பொதுப்பட்டியலில் உள்ள 47 துறைகளிலும் சட்டம் இயற்றும் அதிகாரம் மாநிலத்திற்கும், மையத்திற்கும், உண்டென்றாலும் அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில் மைய அரசின் சட்டமே ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் எனச்சாசனம் கூறுகிறது. எனவே அதிகார மோகம் கொண்ட ஒரு நாடாளுமன்றம் பெரும்பான்மை பலத்தைக்கொண்டு பட்டியல் 1-ல் இவைகளை மாற்றிப் போடமுடியும். அதாவது மைய அரசின் அதிகாரம் செல்லும் துறைகள் நடைமுறையில் (97ம் 47ம்) 144ஆகிறது. எனவே மைய அரசு விரும்பினால் மாநில முன்னேற்றத்தைத் தடை செய்ய இயலும். உதாரணமாக, ஒரு மாநிலத்தின் பத்திரிகைகள் விற்பனை அல்லது வாங்கல் இவற்றின்மேல் கிடைக்கும் வரியும், அவைகளில் செய்யப்படும் விளம்பரங்களின் வரியும் மத்திய அரசுக்கே உரியன. மாநில அரசு எல்லா வகையான விளம்பரங்களின் வரியைப் பெற்றாலும், செய்தித்தாள்களின், விளம்பர வரிகள் மைய அரசுக்கே உரியன. '4 கோடி ரூபாய்க்கு மேற்பட்ட எந்தத் திட்டத்திற்கும் மைய அரசின் அங்கீகாரம் தேவை' என்னும் சட்டம் போன்றவை மாநிலத்தின் முன்னேற்றத்திறகு எவ்வளவு தடையாயுள்ளது என்பதை நாம் நன்கு உணர்கிறோம். இதுமட்டுமன்றி, மாநிலப் பட்டியலில் உள்ள சில அதிகாரங்களைக்கூட தேசீய முக்கியத்துவம்வாய்ந்தது எனக் கூறி மைய அரசு பட்டியல் 1-ல் சேர்த்துக்கொள்ளச் சட்டம் இயற்ற முடியும். ஆனால் ஒரு மாநிலம் இவ்வாறு மைய அரசின் அதிகார வரம்பைக் குறைக்கச் சட்டம் இயற்றுவதை நினைக்கவும் முடியாது. இத்தகு வரைமுறையற்ற அதிகாரங்கள் மைய அரசிற்கு இருப்பது கூட்டாட்சி முறைக்கு மாறானதாகும். இவ்வதிகாரங்கள் மாநிலங்கள் என்னும் குழந்தைகளைக் கட்டிக் காக்கத் தேவை என்று சிலர் கூறலாம். ஆனால் வயது வந்த குழந்தை தாயின்மடியில் இருப்பது எங்ஙனம்? ஆனால் அத்தகைய ஒரு முதிர்ச்சி மாநிலங்களுக்கு இன்னும்வரவில்லை எனக்கூறினால், அமெரிக்காவைப் போன்று தாயாக இருக்கத் தகுதியான பல அம்சங்கள் மைய அரசிடமும் இன்னும் இல்லை என்பதையும் எப்படி மறுக்க முடியும்? சான்றாக, மொழி வளர்ச்சிக்கு ஒதுக்கிய ரூ. 11 கோடியில், 10 கோடி இந்திக்கும், மீதியுள்ள 1 கோடி எல்லா மாநில மொழிகளுக்கும் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்தியத் தாயின் 'அன்பே' வியப்புக்குரியதுதானே?

ஆனால் அண்மையில் கேரளா போன்ற மாநிலங்களில் வளர்ந்துள்ள நிலைமைகளைக் கண்ட சிலர்க்கு மாநில அதிகாரங்கள் 'கபால பைரவனின்' ஆட்சிக்கேவழி வகுக்கும் என்னும் தவறான எண்ணத்தை உண்டாக்கியிருக்கிறது. ஆனால் தமிழகத்தைப்போல் நிலையான, திறமையான ஆட்சிநடத்தும் மாநிலங்கள் இவ்வதிகாரப் பெருக்கினால் உண்டாக வாய்ப்புகள் உண்டு என்பதை நாம் மறத்தல் கூடாது. மேலும் அறிஞர் அண்ணா அவர்கள் மைய அரசின் கொத்துச் சாவியைக் கேட்கவில்லை. மாறாகத் தங்கள் மாநிலங்களுக்குத் தர வேண்டிய உரிமைகளைத் தந்தால் போதும் என்பதே அவர் விருப்பமாகும். இந்த அதிகாரங்கள் தரப்பட்ட பின்னும் கூட, கேரளாவைப் போன்று சட்டம் ஒழுங்கு நிலை குலைந்தால் மைய அரசு தக்க நடவடிக்கைகள் எடுக்க இவை தடையாக இல்லை.

இறுதியாக, மைய அரசின்பால் இவ்வதிகாரங்கள்குவிந்துள்ளனஎன்னும் உண்மையே மாநிலங்கள் மனதில் கூட்டாட்சி அமைப்பை எதிர்க்கத் தூண்டுகின்றன. வரையற்ற இந்த அதிகாரங்களால் அதுஒன்றிய மைய அரசாக மாறிவிடும் வாய்ப்பும் உண்டு, இதனால் மைய அரசு தாங்களாகவே உண்டாக்கிக் கொண்ட ஓர் அமைப்பு என்னும் எண்ணம், அது அயல் நாட்டு அரசாக, ஆதிக்கம் செலுத்துகிறது என்னும் எண்ணத்திற்கு வழி வகுக்கிறது. ஜனநாயகத்தில் இந்த எண்ணத்தைக் கிள்ளுவதே அதன் தலையாய பணியாகும். ஆனால் மைய அரசின் போக்கும், அதன் அதிகாரங்களும் இந்த எண்ணத்தையே வலியுறுத்தும் வண்ணம் அமைகிறது. எனவே நாட்டின் ஒற்றுமை கருதியாவது மாநிலங்களின் அதிகாரங்கள் விரிவாக்கப்படவேண்டும். இதுவே அறிஞர் அண்ணாவின் குரல்; தமிழகத்தின் குரல் ஆகும்.

# குழந்தை!

கு. மாதவிமணாளன், எம். எஸ்சி.

ஆற்றில் சிறந்தது காவிரி யாறே!
பேற்றில் சிறந்தது மக்கட் பேறே!
தேற்றும் மொழிதான் குழந்தை மொழியே
ஆற்றும் துயர்தான் மருந்துவே றிலையே!

கன்னல் மொழியே! யாழின் இசையே!
மின்னல் சிரிப்பே! எழிலின் அசைவே!
செந்நெல் விளையும் நிலத்தே பெய்த
பின்னல் போன்று வந்தமா மழையே!

கையில் கிடக்கும் கனியே! என்றும்
பையில் கிடக்கும் பணமே! நீதான்
தையில் விளைந்த நெல்லே! கண்ணின்
மையில் தோன்றும் எழிலே எல்லாம்!

கரையிலா எழிலுடைக் கடலே! என்றும்
குறையிலா விண்வெளி மதியே! மெல்லத்
தரையிலா டிடும்தளிரே! கொடியே!
நிறையிலா வாழ்வில் நிறைசெய் நிதியே!

மரக்கிளை விடுத்த பிஞ்சே! என்றும்
தரக்கவி வடித்த கவியே! முல்லைக்
கொடியிலே வந்த மொட்டே! வாழ்வின்
முடிவிலே ஒத்த துணைதான் நீயே!

தொட்டால் இன்பம் எனக்குன் னுடலே
பட்டால் இன்பம்; கொடிக்கு முல்லை
மொட்டால் என்றும் எழிலே! உன்னை
விட்டால் உலகம் எதற்கோ எனக்கே!

பெண்ணின் மடியில் கணவனோ குழந்தை
விண்ணின் மடியில் நிலவோ குழந்தை
மண்ணின் மடியில் கடலோ குழந்தை
கண்ணின் வழியில் காட்சியே குழந்தை!

கிள்ளை மொழிதான் கேட்டு மகிழ
பிள்ளை வேண்டும் என்றும் நமக்கே!
தொல்லை மிகுந்த வாழ்வில் மகவே
எல்லை காணாநல் இன்பம் அதுவே!





# அவள் முடிவு அப்படி

குமாரி கே. சந்திரா.

அலுத்துக் களைத்து அலுவலகத்திலிருந்து வீட்டுக்குத் திரும்பிய சந்திரன், கதவைத்திறந்துகொண்டு உள்ளே நுழைந்ததுமே, தரையில் கிடந்த கடிதத்தைக் கண்டான். கையில் எடுத்து, முத்து முத்தான எழுத்துக்களால் முகவரி எழுதப்பட்டிருந்ததைக் கண்டதுமே, அவனது அலுப்பும், களைப்பும் போன இடம் தெரியவில்லை; பொங்கி வழியும் உள்ள மகிழ்ச்சியோடு 'மை டார்லிங்' என்று உதடுகளால் உச்சரித்துக்கொண்டே கடித உரையைக் கிழித்தான். பாதிகூட கிழிக்கவில்லை. அதற்குள் என்ன நினைத்துக்கொண்டானோ தெரியவில்லை. முகவரி எழுதப்பட்டிருந்த முத்தான எழுத்துக்களுக்கு இச், இச் என்று உரையே ஈரமாகுமளவுக்கு முத்தங்கள் கொடுத்தான்! அப்படியும் அவன் களிப்பு அடங்கியதாகத் தெரியவில்லை.

"அல்லி! உன்னை அப்படியே அள்ளி......" என்று சொல்லிக்கொண்டே முழுதுமாகக் கிழித்துவிட்டு, உள்ளேயிருந்த காகிதத்தை எடுத்துப் படித்தான். "அன்புள்ள அத்தான்" என்று தொடங்கி எழுதப்பட்டிருந்த கடிதத்தை, 'அநேக கோடி வணக்கங்கள்' என்பதுவரையில் படித்துவிட்டு நிறுத்தினான்.

அதற்குள் கூடத்துக்கு வந்துவிட்ட அவன், அங்கே அவனும் அல்லியும் திருமணக் கோலத்தில் எடுத்துக் கொண்ட புகைப்படத்தைப் பெரிதாக என்லார்ஜ் செய்து மாட்டி இருந்ததின்மேல் மெல்ல பார்வையை ஓட்டினான்.

"அல்லிக்கொடி போன்ற உனக்கு பொருத்தமாகத்தான் பெயர் வைத்திருக்கிறார்கள் அல்லி! கன்னத்தைப் பாரேன்! ஆப்பிளா? மாம்பழக் கதுப்பா? உதடுகளா இவை! கோவைக்கனி வடிவத்திலே பலாச்சுளை!" என்று சொல்லிக்கொண்டே கடிதத்திற்கு மற்றுமொரு முத்தம் கொடுத்துவிட்டு, மேலே படிக்கத் தொடங்கினான்.

"நீங்கள் இங்கே என்னை விட்டுச் சென்ற கடந்த இரண்டு திங்களாக எனக்கு ஒரு கடிதம் எழுதக்கூட நேரமில்லாமல் இருப்பீர்கள் என்று என்னால் நம்ப முடியவில்லை, அத்தான்! அத்தான், தங்களை சந்திரன் என்றே பெயரிட்டு அழைப்பதில் தவறில்லை என்றே நம்புகிறேன். நாம், நம் பழக்கத்தின் தொடக்கத்தில் அப்படிப் பெயர் எழுதிய கடிதங்களைப் பறிமாறிக்கொண்டது எனக்கு இன்னும் பசியநினைவாகவே இருக்கிறது சந்திரன்."

கடிதம் முடியவில்லை. பூத்துக் களித்திருந்த முகம் மெல்லச் சுருங்கத் தொடங்கியது. விகார ரேகைகள் முகத்தில் குறுக்கும் நெடுக்குமாகப் படர்ந்துவிட்டன. ஏதோ ஒருவித அசூசையோடு மேலே தொடர்ந்தான்.

"கடந்த இரண்டு மாதங்களாக நீங்கள் எனக்குக் கடிதம் எழுதாததைப்பற்றி நான் அவ்வளவாகக் கவலைப்படவில்லை. முதலில் இரண்டொரு நாட்களுக்கு ஒருவித பிரமை இருந்தது. நாட்கள் செல்லச்செல்ல கடிதம் எழுதாமலிருந்தது எனக்கு நல்லதாகவே போயிற்று. ஏன் தெரியுமா சந்திரன்! உங்களை சென்னைக் கடற்கரையில் அந்த பழுதுபட்ட படகுக்கருகில் அடிக்கடி சந்தித்த நேரத்திலே எல்லாம், என் நெஞ்சு பெருமூச்சுகளை உகுத்து விம்மிப் புடைத்ததே ஏன் தெரியுமா? நீங்கள் ஒரு ஆணழகன் என்பதற்காகத்தான்! தங்களுக்கு அப்போது எழுதிய பல கடிதத்தில் இதை நான் வலியுறுத்தி இருக்கிறேன். இதயம் ஒன்றிப் பழகத் தொடங்கிவிட்டதற்கப்புறமும் தங்கள் அழகுக்கு அடிமையாகிவிட்டதுபற்றி நான்ஊர்ஜிதப்படுத்தி இருக்கிறேன். அழகைக் கண்டு மாத்திரமே உங்களை அடைந்த நான், உங்கள் ஆற்றலினையும் கண்டு வியந்ததுண்டு. இதையும் வெளிப்படையாகச் சொல்லி இருக்கிறேன்."

எவ்வளவு ஆர்வத்தோடு தன் மனைவியிடமிருந்து வந்த கடிதத்தை எடுத்துப் படிக்கத்தொடங்கினானோ அதைவிட அதிகமான அலுப்பு இப்போது அவனைப் பற்றிக்கொண்டது. "எதற்காக இந்தப் பழைய கதைகளையெல்லாம் இப்போது அவள் புரட்டுகிறாள்? என்ன வந்துவிட்டது அல்லிக்கு? சந்திரன் என்று என்னைப் பெயர் சொல்லி அழைக்க வேண்டிய அவசியம் எதனால் ஏற்பட்டது? தனக்குள்ளேயே கேட்டுக் கொண்டான் இப்படி.

பிறந்த ஊருக்கு அனுப்பிவைத்து இரண்டு மாதங்கள் ஆகின்றன. அவளிடமிருந்து எந்த தகவலும் இதுவரையில் இல்லை. அவனும் இதுபற்றிப் பெரிதுபடுத்திக்கொள்ளவில்லை. அதுபோலவே அலுவலக அலுவல்கள் அவனது நேரத்தைப் பெரிதும் அபகரித்துக்கொண்டதனால் மனைவிக்கு என்று ஒரு கடிதமும் எழுதாமல் இருந்துவிட்டான். பதவியில் ஏற்பட்ட உயர்வு வேறு, அவன் பொறுப்புக்களை மிகுதிப்படுத்தி சதாசர்வகாலமும் அலுவலகம் பற்றிய நினைவிலேயே அவனை ஆழ்த்திவிட்டது. மனைவியிடமிருந்து எதிர்பாராத நிலையில் தான் அக்கடிதத்தைப் பெற்றான். கடிதத்தின் வாசகங்களும் அவனை எதிர்பாராததொரு திசையிலேயே அழைத்துச் சென்றுகொண்டிருந்தது. ஏதோ ஒரு இயந்திரம் என்ற நிலையில் கடிதத்தை மேலே படிக்கத் தொடங்கினான்.

"சந்திரன், மொத்தத்தில் நான் எப்போதுமே அழகைக் கண்டு ஆனந்திக்கும் ஒருவித மனோபாவத்திற்கு என்னைப் பலியிட்டு வந்திருக்

கிறேன் என்பது தங்களுக்குத் தெரியுமே! அழகு ஆபத்தானது என்பார்கள்! அழகுடைய பெண்கள் அதைவிட ஆபத்தானவர்கள் என்றெல்லாம் நான் கதைகளில் படித்திருக்கிறேன். பெண்கள் மட்டுமா ஆபத்தானவர்கள்! ஆண்களும் கூடத்தான்! எனக்கு வந்த ஆபத்து அழகானவர்கள் வடிவத்தில் அல்லவா?

கேளுங்கள் சந்திரன், அழகுக்கு அடிமைப்படாதவர்கள் இந்த உலகத்திலேயே இல்லை என்பார்களில்லையா? ஒரு பெண்ணுக்கு அந்த இயல்பு வந்துவிட்டால் மட்டும் சமூகம் கொதிக்கும்! சந்தர்ப்பவாதிகளின் குரல் வான் உச்சி வரையில் சென்று எதிரொலிக்கும்! ஏடுகள், இதழ்கள் யாவும் தம் எழுத்துக்களுக்குக் கருப்பொருளாக அதனைப் பயன்படுத்திக்கொள்ளுகின்றன! சந்திரன், எனக்குத்தெரிந்த வரையில் என்பதைவிட நான் பார்த்தவரையில் இதுவரையில் எனக்கு நீங்கள் ஒருவர்மட்டுமே அழகுடையவராகக் காட்சிதந்தீர்கள்! ஆனால் விதி என்ற ஒன்று உங்களுக்கு எதிராகவும் இருக்கக் கூடும் என்பதை என்னால் இப்போது புரிந்துகொள்ள முடிகிறது''

ஏதோ ஒரு சம்மட்டி அடி தன் தலையில் விழுந்துவிட்டது போன்ற உணர்ச்சியில் சந்திரன் இருக்கை விட்டெழுந்தான். தன் அல்லி, ஏதோ ஒரு பயங்கர உலகுக்குள் தன்னை தள்ளிவிடப் போவதற்கு முன்னுரை தந்துவிட்டாள் என்று எண்ணினான். அலட்சியப்போக்கு ஆத்திரப்போக்காக மாறியது. ஆத்திரம் பரபரப்படைந்தது. பரபரப்போடு மேலே தொடர்ந்தான்.

''உண்மைதான் சந்திரன்! விதி உங்களுக்கு எதிராகவே செயல்பட்டுவிட்டது என்பதை உணர்கிறேன், இப்போது. இரண்டு வாரங்களுக்கு முன்னால், அந்த விதி உங்களைவிட ஒரு அழகான வாலிபரின் வடிவத்திலே வந்துவிட்டது. நான் என்னசெய்வேன் சந்திரன்? நான் மணமானவள் தான் என்றாலும், அழகைச்சுவைக்கும் ஆபத்திலிருந்து நீங்கள் என்னை மீட்கத் தவறிவிட்டீர்கள். அதன் விளைவு? சந்திரன் அந்த அழகுமிக்க இளைஞர் என்னைக்கவர்ந்துவிட்டார். அன்பொழுக என்னிடம் பேசுகிறார். ஆதுரமாக நடந்துகொள்கிறார். பெண்களது மனம் ஆழமானது என்று மட்டும் சொல்லுகிறார்கள். அது நெருப்பின் முன் மெழுகு என்றும் இப்போது நான் உணர்கிறேன். பாறையாகவும் இருக்க முடியும் கடற்பரப்பில் இருக்கின்ற வரையில். நெருப்புக்கு முன்னே அது நிச்சயம் மெழுகுதான் சந்திரன்!


என் மெழுகு இதயம் அந்த இளைஞரை விரும்பிவிட்டது. தினமும் அவரோடு உலவச்செல்கிறேன். புதுப்புது ஆடைகள் வாங்கிக்கொடுத்துள்ளார். என் இளமேனிக்கு அவையெல்லாம் எத்தனை எடுப்பாகவிருக்கின்றன தெரியுமா சந்திரன்! சந்திரன், எங்கள் வீட்டுமாடியில் அவர் முன் அறையில் இருக்கிறார். அதுபோவே என் இதயத்தில் எந்த நேரமும் அவர் இருக்கிறார்! இருவரும் சேர்ந்தே இருக்கிறோம். மன்னித்து விடுங்கள் சந்திரன்! நான் தங்களை மறக்க முயற்சிக்கிறேன். நீங்களும் மறந்துவிட்டால் நல்லது! அடுத்த பிறவியிலாவது நீங்கள் இன்னும் அழகுடையவராக அல்லது அழகுக்கு ஈடுஇனி எங்கும் இல்லை என்பதற்கு எடுத்துக்காட்டுடையவராகப் பிறக்கவேண்டும்! அப்போது மீண்டும் சந்திக்க முயல்வோம்! வணக்கம் சந்திரன்!''

கடிதம் முடிந்துவிட்டது. படித்து முடிக்க முடியாத மனநிலைதான் என்றாலும் படித்து முடித்தான்! கடிதம் முடிந்துவிட்டதாக அவனால் ஒப்புக்கொள்ள முடியவில்லை. ''துரோகி'' என்று பற்களைக் கடித்தபடியே இதுபோன்ற நிலையடையும் எல்லோரையும்போலவே அவனும் ஒருமுறை சொல்லிவைத்தான்!

ராமாயணத்தை எழுதி முடித்துவிட்டு, அது முற்றுப்பெற்றுவிட்டதாக வால்மீகி ராமனிடம் கூறியபோது, இல்லை, அதுமுடியவில்லை என்று ராமன்கூட பதில்கூறினானும் அதுபோல் ''கடிதம் முடியவில்லை அல்லி! நம் தொடர்பு அறுந்துபடவில்லையடி துரோகி!'' என்றான். எதிரே அவர்கள் திருமணப் போட்டோவில் இருந்த அல்லி, அவனைப் பார்த்து சிரிப்பதுபோல தெரிந்தது! அந்தப்படம் தன்னைக் கேலி செய்வதாகவே நினைத்துக் கொண்டான்!

கையிலிருந்த கடிதம் சுக்கல்நூறாகிச் சிதறியது! அழகனும்! அழகன்! என்றபடியே அருகே இருந்த ஒரு பாத்திரத்தை எடுத்து புகைப்படத்தின் மேல் வீசினான். அவன் இருதயம் எந்த அளவு உடைந்திருக்கிறது என்பதை எடுத்துக் காட்டுவது போல் படத்திலிருந்த கண்ணாடி சிதறி வீழ்ந்தது! கண்ணாடிதான் சிதறியதே தவிர, படம் சேதமாகவில்லை. சந்திரனும் அல்லியும் மாலைகளுடன், தெய்வ ஒளிவீசி அல்லவா அங்கே படங்களாக நிற்கின்றனர்!

படத்தைப்பார்க்கப் பார்க்க சந்திரனுக்கு ஆத்திரம் மிகுந்து கொண்டே வந்தது. விரும்பினால் படத்தைக் கிழித்துப் போட்டுவிடலாம். தன் அருகே இருக்கும் அவளை வீசியெறிந்துவிடலாம்! அவள் உயிருடன் அவனையே அல்லவா வீசி எறிந்துவிட்டாள்!



## கவிதை ஒரு கதை!

ஒரு கவிஞன் தன் வாழ்க்கையில் நிறைவேருத ஆசைகளை ஒரு இலக்கியமாகவோ, கதையாகவோ, நீண்ட காப்பியமாகவோ மலர்வித்து விடலாம்.

ஆங்கில இலக்கியத்தில் இயற்கையின் உள்வாழ்க்கையைப் பாடுவதில் இணையில்லாப் புலவன் என்று போற்றப்பட்ட வில்லிபம் வோர்ட்ஸ் வொர்த் என்ற கவிஞன் "டின்டன் அபே" என்ற சிற்றிலக்கியத்தைப் பாடினுன். அக்கவிதையில் அவன் பல மறை பொருட்களை வைத்துப் பாடினுன்.

ஒருமுறை அவன் பிரஞ்சு நாட்டுக்குப் போயிருந்தான். அங்கு அவனுக்கு 'ஆனடி வேலன்' என்ற ஒரு அழகிய இளம் பெண்ணின் அன்பும் தொடர்பும் கிடைத்தது. அவளிடம் வோர்ட்ஸ் வொர்த் பிரெஞ்சு மொழியைக் கற்றுக்கொண்டான். அவள் வோர்ட்ஸ் வொர்த்தை விட ஐந்து வயது மூத்தவள் என்ருலும், பருவமும், வேட்கையும் அவர்களுடைய வயது வித்தியாசத்தைப் பார்த்துக்கொண்டு நிற்கவில்லை; காதல் கொண்டார்கள்; அதன் பலனுக ஒரு குழந்தையும் பிறந்தது.

ஆனுல், அடுத்த ஆண்டில் இங்கிலாந்து திரும்பிய வோர்ட்ஸ் வொர்த், மறுபடியும் பிரெஞ்சு நாட்டிற்குப் போக முடியாதபடி சூழ்நிலை ஏற்பட்டுவிட்டது. அந்தப் பெண்ணின் மீது கொண்டிருந்த காதல் துன்பத்தைக் கொடுத்தது; துடிப்பு அதிகரித்தது. அந்த பிரிவுத் துயரில் உருவானதுதான் "டின்டன் அபே" என்ற கவிதை!

—இரணியல் "கலை"

கல்லூரிக்குச் செல்வதற்காக அல்லி அந்த பஸ் டாப்பிங்கில் நிற்பதைத் தொடர்ந்து கவனித்து வந்த அவன், தானும் அந்த ஸ்டாப்பிங்கையே வழக்கமாகிக் கொண்டான். கண்களும் கண்களும் சந்தித்துக் கொண்டன! கடிதங்களும் முறையே பறிமாறிக்கொள்ளப்பட்டன. "அல்லி! உன் பொன்னெளிர் மேனியில் தோயத் துடிக்கிறேன்; தெய்வக் கிருபை எப்போது கிடைக்குமோ" என்று எழுதிய தன் ஒரு கடிதத்தை அவனிடம் சேர்க்கத் துடித்த துடிப்பும் பட்டபாடும் அவனைச் சங்கடத்திற்குள்ளாக்கியது. எப்படியோ நெருக்கம்ஏற்பட்டு கடற்கரையில் ஒரு பழுதடைந்த படகுக்கருகில்சந்தித்து மணிக்கணக்கில் பேசிக் கொண்டிருப்பது வழக்கமாயிற்று. பழக்கம் முற்றி கடைத் தெரு, சினிமா என்று எங்கெங்கெல்லாம் பொழுது போக்க வாய்ப்புண்டோ, அங்கங்கெல்லாம்தாராளமாகச் சென்று வரத்தொடங்கினுர்கள். நவீன காதலர்களாக மட்டும் அல்ல; நாகரிகக் காதலர்களாகக் கூட! கைகோர்த்தபடி ஒருநாள்; இடுப்பில் கையணைத்தபடி ஒருநாள் என்று உலவத் தொடங்கினுர்கள்! பலபேரைப்போல அவர்களது காதல்—காதல் என்பதனேடேயே முற்றுப்பெறவில்லை. பகிரங்கமாகத் திருமணமாகி கணவன் மனைவி என்ற பந்தப் பிணைப்பு வரையில் வந்து சேர்ந்த கப்பலாகத்தான் இருந்தது.

வாழ்க்கைக் கடலில் சற்று முன்பு வரையில் அவனது வாழ்க்கைக் கப்பல் இன்பமாகத்தான் மிதந்து கொண்டிருந்தது! ஆனுல் இப்போது எதிர்பாராத விதமாக பாறையொன்றில் மோதி சுக்கல் நூருகல்லவா உடைந்து சிதறிவிட்டது! இதுவரையில் அவன் 'விதி'யின் மீது நம்பிக்கை இல்லாமலிருந்திருக்கிருன். இனியும் அப்படி அவனுல் இருக்கமுடியுமா? "அல்லி! பழிக்குப் பழி! வஞ்சத்திற்கு வஞ்சம்!! உன்னை விடப்போவதில்லை! உயிரோடு விட்டு இன்னொருவனுடன் உலவ விடப்போவதில்லை" என்று தனக்குள் சொல்லிக்கொண்டான். கொலை வெறி அவனுள் மிகுந்து கொண்டிருந்தது. ஆற்றிக்கொள்ளமுடிந்த ஆத்திரமா அவனுக்கு? காதலித்தவள் கைவிட்டுவிட்டாலே ஆத்திரம் கரை கடந்த வெள்ளமாகி விபரீதங்களை விளைத்துவிடுகிற மனிதன், கரம்பற்றியவள் துரோகம் புரிந்துவிட்டாள் — அதோடு தன் துரோகத்திற்குச் சமாதானம் வேறு கூறத் தொடங்கிவிட்டாள் என்ருல் எப்படிப் பொறுத்துக்கொள்ள முடியும்?

கைக் கடிகாரத்தைப் பார்த்தான். விழுப்புரத்திற்குப் புறப்படும் வண்டிக்கு இன்னும் முக்கால் மணி நேரம் இருப்பதை அந்த மனநிலையிலும் அவனுல் அறிந்துகொள்ள முடிந்தது. எப்படியோ சமாளித்துக்கொண்டு ரயில்வே ஸ்டேஷனை அடைந்து வண்டியிலும் அமர்ந்து கொண்டான். அவனுக்கு எதிரே தானு அந்த இளம் தம்பதிகள் அமர்ந்திருக்கவேண்டும்? இளம் தம்பதிகள் என்ருலும் அவர்களிலும் எத்தனையோ வகையான பேர் இருக்கிருர்கள். இவர்கள் சூழ்நிலையைப் பற்றிக் கவலைப்பட்டவர்களாகத் தெரியவில்லை. தங்களைச் சுற்றிலும் ஒரு புறஉலகு இயங்கிக் கொண்டிருக்கிறது என்ற எண்ணம் அவர்களுக்கு இருப்பதாகவேத் தோன்றவில்லை. வாய்விட்டுப் பேசிச் சிரித்தார்கள்! ஒருவர்க்கொருவர் தின்பண்டங்களைத் தாராளமாகப் பரிமாறிக் கொண்டார்கள். காதலிருவர் கருத்தொருமித்து இருந்த அந்த நிலையைக் காண சந்திரனுல் முடியவில்லை. கண்களை மூடிக்கொண்டாலும் காதுகளையுமா பொத்திக் கொள்ள முடியும்? வெட்கத்தை விட்டு காதினையும் பொத்திக்கொண்டாலும் கருத்துக்குத் தடைபோட யாரால் முடியும்? சிந்தனைக்கு விலங்கு போட யாரால் முடியும்? எதிரே கண்ட காட்சியால் நிலைகுலைந்து போனுன் சந்திரன். தானும் அவளும் முதன் முதலாக அவளது பிறந்த ஊரான விழுப்புரத்தை அடுத்த கிராமத்துக்குப் போகும் போது ஒருவரை ஒருவர் ஒட்டி உரசிக்கொண்டும், காதோடு காதாக கிசுகிசுத்துக் கொண்டும் ரகசியமாக கேலி, கிண்டல்கள் செய்துகொண்டும்போன அந்த நிகழ்ச்சிகள் எல்லாம் கண் முன்னுல் திரைப்படமாகத் தெரியத் தொடங்கியது!

அல்லியின் ஒவ்வொரு அங்கம் அங்கமாக நினைத்துப் பார்க்கத் தொடங்கினுன்! பொன் போன்ற அந்த மேனியின் சொந்தக்காரனுகி விட அவன் எடுத்துக்கொண்ட முயற்சிகள் எல்லாமே அவனுக்கு அந்த நேரத்தில் கவனத்துக்கு வந்தன. கருகருவென்றிருக்கும் கருவண்டு போன்ற கருவிழிகளின் காந்த சக்தியின் முன்பு, இரும்பாகத்தான் அவன் மாறிப் போயிருக்கிருன்! இதுவரையில் அல்லியை வெற்றி கண்ட நாட்கள்—சம்பவங்கள் என்று அவனுக்கு ஒன்றுமே இல்லை.

இப்போது அவன் வெற்றி காண

வேண்டிய—வெற்றி பெற்றே தீர வேண்டிய ஒரு சந்தர்ப்பம்! இதிலும் தோல்வி என்றால் அவனுக்கு உயிர் எதற்கு? ஆண் மகன் என்ற பெயர் தான் எதற்கு?

ஏதோ ஒரு ஸ்டேஷனில் அந்தத் தம்பதிகள் இறங்கிப் போய்விட்டிருக்கிறார்கள் எங்கே எப்போது இறங்கினார்கள். என்பதை அவன் கவனிக்கவேண்டிய அவசியமில்லை. அவன் உணர்ச்சிகளைக் கீறிவிட்டு விட்டுப் போய்விட்டார்கள்! கொதிக்கும் உள்ளத்தோடு, அமர்ந்திருந்த அவனை சில்லென்று வீசிக்கொண்டிருந்த காற்றுகூட குளிரச் செய்ய முடியவில்லை. இன்னொரு அழகனைப் பற்றிய எண்ணத்தில் அவன் எல்லாவற்றையுமே மறந்து போய்விட்டான்! விழுப்புரம், விழுப்புரம் என்று போர்ட்டர் கூச்சல் போடாமலிருந்திருந்தால், சந்திரன் அந்த ஸ்டேஷனில் இறங்கி இருப்பானோ என்னவோ!

இறங்கினான். அப்போது தான் கருக்கல் கட்டத் தொடங்கி இருந்தது! ஸ்டேஷனை விட்டு வெளியே வந்து ஏதோ ஒரு பாதையில் நடக்கத் தொடங்கினான். இன்னும் ஒரு அரை மணி நேரம்தான். அவன் ஆத்திரம் அப்புறம் அடங்கிப் போய் விடும்! மிருக வெறி வெற்றி பெற்று விடும். அல்லி, கிள்ளியெறியப்பட்ட அல்லிக் கொடியாகிவிடுவாள்! ஆத்திரக்காரனுக்கு அறிவு துல்லியமாக செயல்படாது என்பார்கள்! அதோ இருளில் ஒருவன்—ஒரு இளைஞன் நடந்துபோகிறான்! மிடுக்கான நடை மட்டும் தெரிகிறது. சந்திரன் ஒரு சிகரெட்டை எடுத்துப் பற்றவைப்பதைப்போல் தீக்குச்சியை உரசினான்! அந்த வெளிச்சத்தில் அந்த இளைஞன்தான் எவ்வளவு அழகாய் இருக்கிறான். தான் தேடிவந்த வேட்டைப் பொருள்களில் ஒன்று கிடைத்துவிட்டதாக சந்திரன் தனக்குள் தீர்மானித்துக் கொண்ட பின், தன் அறிவு தடைப்படாமல் செயல்படுகிறதா? என்பதற்கு, தனக்குத் தானே தேர்வு நடத்திக்கொண்டான்! அதுதான் தீக்குச்சி 'நாடகம்'! அதிலே அவன் வெற்றி பெற்று விட்டானும்! இனிமேல் என்ன? அந்த இளைஞனையே பின்தொடரலாமா? குறுக்குவிசாரணைகள் நடத்தலாமா? அல்லியைப் பற்றி அத்தனையும் கேட்டுவிடலாமா? தீர்க்கமாகத் தான் சிந்தனை செய்தான்! சிந்தனையின் அறுவடைதான் பூஜ்பமாக இருந்து அவனைச் சித்திரவதை செய்தது! ஏற்கனவே அவன் அனுபவிக்கும் கொடுமைகள் போதாதென்று இவைகள் வேறு!

ஒரு நிமிடம்! ஒரே ஒரு நிமிடம் தான். நின்று கண்களை மூடிக் கொண்டு சிந்தனை செய்தான்! அதிலிருந்து விடுபட்டு அந்த இளைஞனைப்பார்த்தான். காணவில்லை! மந்திரமா? மாயமா? அவன் எங்கே—போயிருப்பான்? இப்போது புதிய சிந்தனைகள்! ஏறக்குறைய அவன் வரவேண்டிய இடத்திற்கு வந்து விட்டான்! அந்த தெருவில்தான் அல்லி இருக்கிறாள். அல்லியை வளர்த்துப் பெரியவளாக்கி சந்திரனுக்குக் கைப்பிடித்துக் கொடுத்த பாட்டி இருக்கிறாள்! ஆயிரமென்ன? பல்லாயிரம் பேரழகிகளின் கூட்டத்தின் இடையிலே கொண்டு நிறுத்தி ஒரேவித சீருடை தந்துவிட்டிருந்தால்கூட, தூரத்திலிருந்தபடியே தன் அல்லியை சந்திரனால் அடையாளம் கண்டுகொள்ள முடியுமே! அதோ அவள்தான் அல்லி! கோலம் போட்டுக் கொண்டிருக்கிறாள். "நீ இருக்கும் கோலத்தில் வீட்டுக்குக் கூட கோலம் ஒரு கேடா?" இப்படி எண்ணிக்கொண்டே நடந்தான்! இதுவரையில் இருந்த வேகம் இப்போது விரும்பினாலும் கிடைக்கவில்லை. தானாகவே கால்கள் தள்



## விற்பனையாளர்களுக்கு

விற்பனையாளர்கள் அனைவருக்கும் டிசம்பர் மாத பட்டியல் அனுப்பப்பட்டுள்ளது. விற்பனையாளர்கள் தங்கள் பாக்கித் தொகை முழுவதையும் அனுப்பி வைத்து ஒத்துழைக்க வேண்டுகிறோம்.

உரிமையாளர்,
'காஞ்சி'


ளாடின! தளர்ந்த நடை என்பார்களே. அதுதான் இப்போது சந்திரனுக்கு!

கோலம் போட்டுவிட்டு நிமிர்ந்த அல்லி சந்திரனை அடையாளம் கண்டு கொண்டு, ஒரே துள்ளலிலே உள்ளே ஓடிவிட்டாள்! அவளுக்கு நிச்சயம் தெரியும்! சந்திரன் காலையிலேயே வந்துவிடுவான் என்று! "பாட்டி! பாட்டி! அத்தான் வந்து விட்டார் பாட்டி!" என்று ஓடிச் சென்று பாட்டியை எழுப்பினாள். அதற்குள் சந்திரனே வீட்டிற்குள் வந்துவிட்டான்! எதிர்கொண்டு ஓடி வரவேற்கப் போனவள்—ஏனோ தாமதித்து அடுக்களைக்குள் நுழைந்து விட்டாள் காபி தயாரிக்க! போதாதா இது? தான் இந்த அளவிற்கு அலட்சியப்படுத்தப்படுவோம் என்பது அவன் முன்கூட்டியே எதிர்பார்த்ததுதான்! வந்தவன் கூடத்திலிருந்த ஒரு கட்டிலில் அப்படியே சாய்ந்தான்! வானம் நன்கு வெளுத்து விட்டிருந்தது! சாய்ந்தவனை எதிரே மாட்டியிருந்த அவர்களது திருமணப் படம் சிரித்து வரவேற்றது! தூ! என்று காரி உமிழப் போனதைத் தடுத்து நிறுத்தி—எதிரே காப்பியை நீட்டினாள் அல்லி! தன்னை மறக்க முயற்சிப்பவளா இவள்? என்னைவிட ஒரு அழகனது அணைப்புக்குத் தன்னை தந்துவிட்டவளா இவள்? அவனால் கற்பனை செய்யவும் முடியவில்லை. காப்பியைக்கைநீட்டி வாங்கவும் முடியவில்லை. ஏற இறங்க ஒரு முறை பார்த்தான்.

"எனக்குத் தெரியும் அத்தான்! இன்று காலையில் நீங்கள் நிச்சயம் வருவீர்கள் என்று! அதனால்தான் எல்லாமே தயாராக வைத்திருக்கிறேன்." என்றாள் அந்த குமுத மலர்! அவனுக்குப் பேச நாடியும் இல்லை. துடிப்பும் இல்லை. ஆத்திரமும் அடங்கவில்லை.

எதுவும் பேச ஓடவில்லை. தெய்வ ஒளி வீசும் பேரழகோடு களங்கமற்றவளாக எதிரே நிற்கும் அல்லியின் அன்றலர்ந்த முக எழிலில்—அவனால் எதையுமே நிச்சயிக்க முடியவில்லை "அல்லி" என்று அழைத்தான்! அதிலே ஆத்திரம் ஒட்டி வந்ததாக அவன் நினைப்பு! வெறும் நினைப்புத்தான்! ஆனால் அன்பு அல்லவா இழைந்திருக்கிறது!

'சந்திரன்! நீ ஒரு ஆண்மகன்! மாற்றான் ஒருவனுக்குத் தன்னைத் தந்துவிட்ட உன் மனைவி எதிரே" என்று அவனுக்கு யாரோ எச்சரிக்கை செய்வதுபோல இருந்தது!

"வாருங்கள் அத்தான்! மாடிக்குப் போகலாம்! இப்போதுதான் அவர் மேலே போனார்." என்றாள் அல்லி. இகழ்ச்சி அதிலே இழைந்தோடியது,

அவன் பேசவில்லை. அவளைப் பின்தொடர்ந்தான். அந்த அழகனை அந்த அறையிலேயே வைத்து சமாதி எழுப்பிவிட அவன் தயாராகி விட்ட உள்ளத்தோடு பின் தொடர்ந்தான். வாசலுக்குவெளியே வந்து அவள் நின்றாள். அவளுக்குப் பின்னால் அவன் நின்றான். மாடிப் படி எங்கே? மாடிக்கு எப்படிப் போவது? அவன் குழம்பினான், ஏறிட்டுப் பார்க்கும்போது, அங்கே மாடி இல்லை—ஓட்டு வில்லைகள் அவனைப் பரிகசிப்பதுபோல இருந்தன.

இப்போதுதான் அவன் தன் உலகத்துக்கு வர முடிந்தவனானான். "மாடியில்தான் அவர் குடி இருக்கிறார்." என்று அல்லி எழுதி இருந்தது பொய் என்பதை இப்போதுதான் முதன் முதலாக அவனால் உணர முடிந்தது! வீட்டுக்கு மாடி இல்லை என்பது அவனுக்குத் தெரிந்ததுதானே! தெரிந்துமா இந்த ஏமாற்றம்?

"வாருங்கள் அத்தான் மாடிக்கு!" அவள் கேலி பேசினாள். அதனை அவனால் ரசிக்க முடியவில்லை,

"என்ன அத்தான் திகைக்கிறீர்கள்? மாடியைக் காணோமே என்றா? வாருங்கள் அத்தான் அவரைக் காட்டுகிறேன்." என்று மீண்டும் உள்ளே கையைப் பிடித்து பரபரவென்று இழுத்துச் சென்று கட்டிலில் அமர வைத்தாள்!

"அத்தான்! பாட்டிக்கு உடல் நலமில்லை என்று கொண்டு வந்து விட்டுவிட்டுப் போனீர்களே. அதன் பின் நலம் கேட்டு ஒரு கடிதமாவது எழுதினீர்களா?"

அவன் பேசமுயன்றான். "அல்லி ...என்றான் மெல்ல. "இருங்கள் அத்தான்! நான் பேசிவிடுகிறேன்! ஆண்கள் அவ்வளவுதான் என்பதற்கு நீங்கள்மட்டும் விதிவிலக்கா என்ன? எத்தனை நாட்கள்தான் தபால்காரரைக் கேட்பது? அவர் இப்போதுதான் எழுதுகிறார்கள் என்று கேலி செய்வது? நானாவது எழுதலாம் என்றால் இரண்டு மைல் நடந்துபோய் கடிதம் வாங்கிவர முடிகிறதா என்ன?"

சந்திரன் மெல்ல மெல்ல தன் தவறை உணரத்தொடங்கினான். ஆனாலும் அந்தத் தவறுக்காக அல்லி, இவ்வளவு பெரிய தண்டனை தந்திருக்கக்கூடாது என்பதையும் அப்போது எண்ணிப் பார்க்கத்தான் செய்தான்!

அல்லி தொடர்ந்தாள்: "பாட்டி உடம்பு தேறினார்கள். அதன்பின் எனக்குப்பிடித்த ஒவ்வொரு பலகாரங்களாக எனக்குசெய்துதரத் தொடங்கியதும் தனிமையில் அவற்றை என்னால் எப்படி அத்தான் உண்ணமுடியும்? எனக்குப் பிடித்தவை பெரும்பாலும் உங்களுக்கும் பிடித்தவை. அவற்றைக் கையால் தொடும்போதெல்லாம் உங்கள் நினைவுஎன்னைப்பாடாய்ப்படுத்தி விட்டது. அத்தான்! உடனே ஓடி வாருங்கள்! தவியாய்த்தவிக்கிறேன் என்றால் வரக்கூடியவரா நீங்கள்? நீங்கள் உடனே வரவேண்டும் என்பதற்கு நான் கண்ட முடிவுதான் அத்தான் அந்தக் கடிதம்" அல்லியின் கண்களிலிருந்து நீர் சுரந்துகொண்டிருந்தது! பாவிப் பெண்ணே! அந்தக் கடிதத்தைக் கண்டு உண்மையை அறிந்து செல்லத்தான் நான் வந்தேன்! அன்றி, வராமலேபோகும் நிலையும் உன் கடிதத்தால் ஏற்படலாம் என்று ஏன் மறந்தாய் அல்லி" என்று கேட்டுக்கொண்டே அவளை அப்படியே வாரி அணைத்துக் கொண்டான்.

அந்த அணைப்பில் தழும்பிக் கொண்டிருந்த ஆத்திரம் போன இடம் தெரியவில்லை! அணைத்தபடியே "இதுபோன்ற பலப்பரீட்சையில் பெண்களுக்கு எப்போதுமே பேராசைகூடாது. அல்லி ஒரு பெண் எவ்வளவு தவறுகள் வேண்டுமானாலும் செய்யலாம், அவற்றை மன்னிக்கவும் செய்யலாம். ஆனால், தன் கணவன், தன்னைச் சந்தேகிக்கும்படியான காரியங்களை மட்டும் செய்யவே கூடாது" என்றான்.

"சரி! சரி!! அத்தானை குளிக்கவை அல்லி"! என்று சொல்லிக் கொண்டே பாட்டி அங்கு வந்தாள்.

"குளியலா! எல்லாம் சென்னைக்குப்போய் ஆகட்டும் என்றான் சந்திரன்! பொருளைப்புரிந்து கொண்டு சிரித்தாள் அல்லி! புரியாமல் விழித்தாள் பாட்டி! ✽

# மனித உரிமைகள்

—செய்யாறு செல்வம், எம், ஏ.—

1948-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 10-ஆம் நாள் மனித சமுதாயத்தின் வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய நாள். அன்றுதான் ஐக்கிய நாடுகள் பேரவை பாரிஸ் நகரில் கூடி மக்கள் உரிமைபற்றிய 'சாசனத்தை' வெளியிட்டது. அந்த நாள் மனித சமுதாயம் உரிமை கோரி நடத்திய நீண்டபோராட்டத்திற்கு ஒரு வெற்றி விழா.

மனித சமுதாயம் தோன்றிய நாள் முதல் மனிதனை மனிதன் அதிகாரத்தின் பெயரால், இனத்தின் பெயரால், நிறத்தின் பெயரால், மதத்தின் பெயரால், சாதியின் பெயரால், பண வலிமையின் பெயரால், பாலின் பெயரால் (பெண்களை ஆண்கள் அடிமைப்படுத்துவது) அடிமைப் படுத்தியும், சுரண்டியும் வந்தனர். நாகரிகம் பரவாத நேரத்தில் மனிதன் விலங்குகளைப்போல மலைக் குகைகளிலேயும், மரப் பொந்துகளிலேயும் வாழ்ந்துவந்த காலத்தில், வலியோர் எளியோரை அடிமை கொண்டனர். 'வலிமையே உரிமையாக' அங்கே விளங்கியது. நாகரிகம் பரவி மனித சமுதாயம் அரசியல் அமைப்பையும் பெற்ற பிறகு, பாமர மக்கள் கொடுங்கோல் ஆட்சியின் கீழ் பல இன்னல்களை அனுபவித்தனர். கொடுங்கோலர்கள் தங்கள் செய்கைக்கு மதத்தையும் ஆண்டவனையும் துணைக்கழைத்தனர்.

"மக்களை ஆளவே மன்னனை மகேசன் படைத்தான். மன்னன் கொடுங்கோலனுக இருந்தால், மக்கள் மன்னனை எதிர்த்துப் புரட்சி செய்யலாகாது. மக்கள் தாங்கள் செய்த பாவங்களுக்கு மகேசனுல் அனுப்பப்பட்ட தண்டனையாகக் கொடுங்கோலனை ஏற்றுக்கொள்ள வேண்டும்," என்று கொடுங்கோலர்கள் "தெய்வாம்சக் கொள்கை" பேசிவந்த காலம் ஒன்று இருந்தது. அந்தக் கொடுங்கோல் ஆட்சிக்கும் இன்றைய 'பிரிதிநிதித்துவ மக்களாட்சிக்குமிடையே எவ்வளவு நீண்ட பாதையை மனித சமுதாயம் கடந்து வந்துள்ளது!

பண்டைக் காலத்தில் மனிதனை மனிதன் அடிமைப்படுத்தி விலங்கைப்போல் நடத்தி வந்தான். பண்டைய கிரேக்க நாட்டில் போர்க் கைதிகள் அடிமைகளாக நடத்தப்பட்டனர். ரோமாபுரியில் மனிதர்கள் கடனுக்காக விற்கப்பட்டனர். ஜுலியஸ் ஸீஸர் போர்க் கைதிகளை ஏலத்தில் விற்ருன். பிரஞ்சு நாட்டில் நிலத்தை விற்கும்போது அதில் உழைத்துவந்த அடிமைகளும் சேர்த்து விற்கப்பட்டனர்! பெண்ணடிமைகள் பிரான்சில் மாடுகளோடு சேர்ந்துநிலத்தை உழுதனர்!!

ஆப்ரிக்கா கண்டம், வெள்ளையர்களுக்கு அடிமைகளின் வேட்டைக் காடாயிருந்தது. அடிமைத்தனம் அரசோச்சிய காலத்தில் ஆண்டொன்றுக்கு 4 இலட்சம் கருப்பர்கள் அடிமைகளாகக்கொண்டு செல்லப்பட்டனர். அடிமைகளை ஏற்றிச்சென்ற கப்பல் பளுகாரணமாக மூழ்குந் தருவாயில் இருந்தால், பளுவைக்குறைக்க சில அடிமைகள் கடலிலே பிடித்துத் தள்ளப்படுவதுண்டு. 1808-இல் தான் இங்கிலாந்தில் அடிமைத்தனம் சட்டத்தால் ஒழிக்கப்பட்டது. அமெரிக்காவில் அடிமைத்தனத்தை ஒழிக்க ஓர் உள்நாட்டுப் போரே ஏற்பட்டது. உள்நாட்டுப் போரின் முடிவில், ஆப்ரகாம்லிங்கனுல் 1863 ஜனவரி 1ஆம் நாள் அமெரிக்காவில் அடிமைத்தனம் ஒழிக்கப்பட்டது.

மனிதனின் உடல் மற்ருெரு மனிதனுக்கு அடிமைப்படுத்தப் பட்டது போல், மனிதனின் உள்ளமும் மதத்தின் பெயராலும் மூடநம்பிக்கையின் பெயராலும் பலகாலமாக அடிமைப் படுத்தப்பட்டு வந்தது. ஐரோப்பாவில் கிருஸ்தவ மதத்தின் பெயரால் சிந்தனை உரிமையும், கருத்துச் சுதந்திரமும் பறிக்கப்பட்டு பகுத்தறிவு வாதிகள் சொல்லொணுத கொடுமைகளுக்கு ஆளாயினர். "உலகம் உருண்டை வடிவமானது" என்று கூறியதற்காக கலீலியோ சிறையில் தள்ளப்பட்டார்; முழந்தாளிட்டுப் பணிய வைத்து 'பைபிளின்மீது' கை வைத்து மன்னிப்புக் கோரும்படிச் செய்தனர். கலீலியோ பத்து ஆண்டுகள் சிறையில் வாடி சிறையிலேயே இறந்தார். கத்தோலிக்க மதத்தின் கொடுமையைக் கண்டித்ததற்காக, ப்ருனே பல ஆண்டுகள் சிறை வைக்கப்பட்டு இறுதியில் 1600 பிப்ரவரி 16ஆம்நாள் ரோமாபுரியில் உயிரோடு கொளுத்தப்பட்டார். இங்ஙனம் அரசு பீடமும் மத பீடமும் மனித உரிமைகளைக் காலால் மிதித்துத் துவைத்து வந்தன. இவ்விரண்டு கொடுங்கோன்மையையும் எதிர்த்து தனிமனிதர்களின் உரிமைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து அவை விரிவடையச் செய்தவை இரண்டு இயக்கங்கள். ஒன்று சீர்திருத்த இயக்கம்; மற்ருென்று தொழிற் புரட்சி தோற்றுவித்த முதலாளித்துவம்.

தனி மனிதனின் மனச்சாட்சிதான் தலையாயது என்று சொல்லி அவனது உரிமைகளுக்கு ஏற்றம் கொடுத்தது சீர்திருத்த இயக்கம்.

மத பீடம், அரசு பீடம் ஆகிய இரண்டின் பந்தங்களில்லாமல் தொழில் செய்து தனிப்பட்டவர்கள் பிழைக்க வழி செய்து கொடுத்து, மனித உரிமைகள் வளருவதற்கான சூழ்நிலையை ஆரம்பக்கட்டத்தில் தோற்றுவித்தது முதலாளித்துவம்.

18-ஆம் நூற்ருண்டில் உருவான மனித உரிமைகள் வரலாற்றுப் புகழ், வாய்ந்தவை. அமெரிக்காவின் விடுதலையும் பிரெஞ்சுப் புரட்சியும் அவற்றின் நேரடி விளைவுகள், இவையிரண்டும் 19-வது நூற்ருண்டில் மனித உரிமைகள் உலகமெங்கும் மறுமலர்ச்சி காணத் துணைபுரிந்தன. தொழிற் புரட்சியின் பயனுக, வேளாண்மைக்கு இருந்து வந்த முக்கியத்துவம் ஒழிந்து ஆலைத் தொழில் நாட்டின் பொருளாதாரத்தில் முதன்மை பெறலாயிற்று. ஆலைத் தொழில் வன்மை பெற்று விளங்கவே, அதில் வேலை செய்து வந்த தொழிலாளர்கள், அரசியல் உணர்வு மிக்கவர்களாகவும் கட்டுப்பாடுள்ளவர்களாகவும் விளங்கினுர்கள். தொழிற்சாலைகள் பெருகப்

(15-ம் பக்கம் பார்க்க)

**'தனி மனித உரிமைகள்' பற்றிய குரல், உச்சக் கட்டத்திலிருக்கிற நாள் இது. இதனைப் பெற மனிதன் எடுத்துக்கொண்ட முயற்சிகள்தான் எவ்வளவு பயங்கரமானது......!**



# காமராசருக்கு-டில்லியில் வேலை?

அன்புள்ள நண்பா!

சில ஆண்டுகளுக்கு முன்புவரையில் தமிழ் நாட்டில் ஒரு நாடகக் குழு, சீரோடும் சிறப்போடும் புகழோடும், பொலிவோடும் தமிழகத்தின் தலையாய நகரங்களில் எல்லாம் தன் நாடகத்தை நடத்தி வந்தது. நவாப் டி. எஸ். ராஜமாணிக்கம் கம்பெனி என்பது அதன் பெயர்.

அந்த நாடகக் குழுவின் விளம்பரங்களிலே ஒரு புதுமையைக் காணலாம். அதாவது, "நவாப் ராஜமாணிக்கமே அனுமாராக நடிக்கும்—ராமாயணம்; நவாப் ராஜமாணிக்கமே நவாபாக நடிக்கும் — பக்தராமதாஸ்" என்று இருக்கும்.

இப்படி 'ஏ'காரமிட்டு விளம்பரம் செய்வதன் மூலம், நவாப் ராஜமாணிக்கம் அவர்களுக்குத் தனியொரு புகழ் கிட்டுவது மட்டுமல்லாமல், அந்தக் குறிப்பிட்ட பாத்திரங்களை அவர் ஏற்கும்போது, அவர்போல் இன்னொருவர் ஏற்று நடிக்க முடியாது என்ற பொருளும் விளக்கப்புட்டுவிடுகிறது. அத்துணைச் சிறப்பாகவிருக்குமாம் அவரது நடிப்பும்—நாடகமும்!

"நவாப் ராஜமாணிக்கமே, அனுமாராக நடிக்கும்" —என்பதில் எவ்வளவு அழுத்தம் இருக்குமோ, அவ்வளவு அழுத்தம்—அதைவிடவும் அழுத்தம் — காமராசரே முன்னின்று நடத்தும் ஒரு தேர்தலிலும் அப்படியே இருக்கும் என்பதும் புகழ்பெற்ற ஒரு செய்தியாகும்.

யாரோ ஒருவருக்காக அல்லது யாரோ தன் கட்சி உறுப்பினர் ஒருவருக்காக அவர், தேர்தலில் ஈடுபடுகிறார் என்றால், அவரோடுகூடவே அவரது ரத, கஜ, துரக, பதாதிகள் அனைத்தும் ஈடுபடும் என்பது தானாகவே பெறக்கூடிய செய்தியாகும்.

காலிகள், கூலிகள், போலிகள் கங்காணிகள், முதலான சிறப்புக்குரியவர்கள் எல்லாம்கூட புதுப் பொலிவோடும், வலிவோடும் மார்விரித்து — தலைநிமிர்ந்து ராஜநடை போட்டு நடக்கத்தொடங்கிவிடும் அற்புதங்களை எல்லாம் நாம், கடந்த காலத்தில் அனுபவ வாயிலாகவே அறிந்திருக்கிறோம்.

யாரோ ஒருவருக்காக! — என்பதிலேயே இப்படியென்றால், காமராசருக்காகவே என்கிறபோது அந்தக் சாட்சியும், களமும் எப்படி இருக்கும் என்று நினைக்கிறாய் நண்பா!

கடந்த பொதுத் தேர்தலின்போது, விருதுநகர் தொகுதியில் போட்டியிட்டபோது, அவரை எதிர்த்து நின்ற மாணவர் தலைவராம் சீனிவாசன் என்ன பாடு படுத்தப்பட்டார்? உயிராவது மீளுமா என்ற வினாவையல்லவா, ஒவ்வொரு நிமிடமும் கேட்டுக்கொண்டிருக்க நேர்ந்தது!

சீனிவாசன்—கழகத்தின் வேட்பாளர். ஒரு வேட்பாளர், தன் உயிரையும் பணயம்வைத்து, காமராசருடன் போராட வேண்டி வந்தது. மத்தியிலும், மாநிலத்திலும் காங்கிரசுக் கட்சியே கோலோச்சிக் கொண்டிருந்த நாளிலேயே! அப்போது சீனுவாசன் சற்றே ஏமாந்து போய்விட்டிருந்தால், சீனுவாசன் "காணுமற்"கூட போய்விட்டிருக்கக்கூடும்!

இப்போதைய சூழ்நிலை என்ன? ஆட்சி அதிகாரம் முற்றிலும் பறிபோன நிலையில் இஞ்சிதின்ற குரங்காக உறுமிக்கொண்டிருக்கிற வேளையில், பதவியையும், பவிசையும் இழந்துவிட்டு, அதனைக் கொஞ்சம் காப்பாற்றிக்கொள்ளும் கடைசி ஆயுதமாகக்கொண்டுள்ள நாகர்கோயில் தேர்தலிலே, தன்னை ஒருவர் எதிர்க்கிறார் என்றால், காமராசரின் பட்டாளங்கள் வாளா விருந்துவிடுமா?

அராஜகங்கள்—வன்முறைச்செயல்கள் தலைவிரித்தாடத் தொடங்கியுள்ளன. அமைச்சர் முத்துசாமி அவர்கள் பேசமுடியாதவாறு மறிக்கப்பட்டிருக்கிறார்.

அமைச்சர் கோவிந்தசாமி அவர்கள் பயணத்தைத் தொடரமுடியாதவாறு தடுக்கப்பட்டிருக்கிறார்.

முன்னாள் சட்டமன்றத் தலைவர் ஆதித்தனார் அவர்கள் தாக்குதலுக்காளாகி—கார் சேதப்படுத்தப்பட்டு, அவரும் காயமடைந்திருக்கிறார்.

தொகுதியின் பல இடங்களிலும், கழகக் கொடிகள் பிடுங்கி எறியப்பட்டுள்ளன. புதிய கொடிகளை ஏற்றும்போது அடிதடியில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

இவ்வளவும் எதற்காக நடைபெறுகிறது?

காமராசர் நாகர்கோயிலேயே காங்கிரஸ் வேட்பாளர்—அதனால்!

நண்பா! விருதுநகரிலே 'படுத்துக்கொண்டே ஜெயிப்பேன்' என்று கூறியபொழுது, அவர்தம் படைகள் எல்லாம் ஏற்கெனவே தயாராகவிருந்தன! அதனால் படுக்கப் போய்விட்டார்! படுத்துக்கொண்டே கிடந்த வேளையிலேயே, சீனுவாசன் தாக்கப்பட்டார்! பலமுறை!

இப்போது, நாகர்கோவில் தொகுதியைச் சுற்றிப் பார்த்துவிட்டு ஒப்புக்கொண்டிருக்கிறார்! வேட்பாளராக நிற்க!

அதாவது, அராஜகவாதிகளையும் வன்செயலாளர்களையும், காலிகளையும், கூலிகளையும் ஏற்பாடு செய்து

விட்டு வந்து ஒப்புக்கொண்டிருக்கிருர் என்ருகிறது! இதுதானே உண்மையாகவுமிருக்கமுடியும்?

ஆட்சி அவர்களிடமிருந்தது! அதனுல் தமிழ்நாடு முழுமைக்குமாகக் "குத்தகை"க்குப் பேசிக்கொண்டார்கள் அப்போது! இப்போது அது முடியவில்லை—முன்கூட்டியே ஏற்பாடு செய்துகொள்ள வேண்டிய அவலம்!

நண்பா! 1967லே அவர் போட்டியிட்டபோது, விருதுநகர்—சட்டமன்றத் தொகுதிக்குத்தான் போட்டியிட்டார்! தானும் வெற்றிபெற்று, தன் கட்சியும் பெரும்பான்மை பெற்ருல், பக்தவத்சலம் தூக்கியெறியப்படக்கூடும் என்ற "யூகம்" அப்போது வெளிப்படையாகவே இருந்தது!

தமிழ்நாடு செய்த நற்பயன், அந்த எண்ணம் கருவிலேயே சிதைக்கப் பட்டுப்போயிற்று!

அதன்பிறகு காங்கிரசுத் தலைமைப் பதவியும் பறிக்கப்பட்டு, தமிழகக் காங்கிரசில் இருந்த சொல்வாக்கும் ஏலம் கூறப்பட்டு—'நீயா, நானு' வலிமைப்போட்டியில் மூலையிலே முடக்கப்பட்டுப்போனுர்!

உலகப் பெருந்தலைவர்களுக்குகெல்லாம் அறிவுரை வழங்கியர் என்று எழுதிப்பார்த்துப பெருமைப்படும் நிலையிலிருந்த அவர், மத்திய அரசின் தயவுக்கு இப்போது காத்திருக்கவேண்டிய பரிதாபகரமான நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிருர்!

நாகர்கோயில் தேர்தலிலே, வெற்றி பெற்றுச் சென்று ஏதோ ஒரு அமைச்சர் பதவியை ஏற்க விருப்பதாக விளம்பரப்படுத்தப்படுவது, எத்தனை ஏமாற்றுப் பேச்சு? என்பதை நாட்டுக்கறிவிக்க வேண்டாமா?

தமிழகத்தின் சார்பில் காங்கிரஸ் வேட்பாளர்கள் மூன்றுபேர் சென்ருர்களே — தமிழகத்துக்குப் பிரதிநிதித்துவம் தரப்படவேண்டும் என்ற எண்ணம் மத்திய அரசுக்கு இருக்குமானுல், அவர்களில் ஒருவருக்குத் தரபட்டிருக்கலாமே!

காமராசரைவிட ஆழமாகச் சிந்திக்கக் கூடியவர்கள் அவர்கள்! திறம்பட பிரச்னைகளை அணுகக் கூடியவர்கள் அவர்கள்!

காமராசர் வெற்றி பெற்றுச் சென்றுதான் அதனை ஏற்கவேண்டுமென்ருல், பொருள் என்ன?

காமராசருக்குதான் அந்த அமைச்சர் பதவியைத் தரவேண்டும் என்பது இந்திரா அம்மையாரின் இதய வேட்கையாக இருக்குமானுல், நேசமணி அவர்கள் காலமாகும் வரையில் காத்திருக்க வேண்டிய அவசியம் என்ன?

இந்திரா விரும்பி இருந்தால், மேலவை உறுப்பினராக நியமனம் செய்து கொண்டு அமைச்சராக்கி இருக்க முடியாதா?

நாகர்கோயிலில் காமராசர் தோற்றுவிட்டாலும் இதனைச் செய்ய இந்திரா அம்மையாரின் அரசுக்கு இயலாத காரியமா?

அரசியல் சட்டத்தை—அதன் ஷரத்துக்களை வருக்கின்றபோதே இப்படிப்பட்ட நிலைமைகளுக்கெல்லாம் இடம் வைத்துத்தானே இயற்றியிருக்கிருர்கள்!

காமராசர், மத்திய அரசில் ஒரு அமைச்சராக ஆக்கப்படவேண்டுமென்ருல் அதற்கு நாகர்கோயிலையே நம்பி இருக்கவேண்டிய கட்டாயம் ஏதுமில்லையே! அமைச்சராகி, அதன் பின் இந்தியத் துணைக்கண்டத்துக்குள்ளேயே ஏதாவது ஒரு தொகுதியில் இன்று தன் "மக்களாதரவை" மாமன்றத்துக்கு எடுத்துக் காட்டும் வாய்ப்பு, வாய் பிளந்துகொண்டுதானே இருக்கிறது!!

நாகர்கோயில் பகுதி, திருவாங்கூர் அரசோடு போராடிக்கொண்டிருந்த காலத்திலே நேசமணி அவர்களை, சரியான முறையில் பழிவாங்கியவர் காமராசர்! அதுமட்டுமல்லாமல், அந்தப் பகுதியின் வளத்துக்கும், வாழ்வுக்கும் தடையாக இருந்து வந்தவர் காமராசர்!

அந்தப் பகுதியின் மீது, காமராசருக்கு இப்படியொரு ஆத்திரம் ஏற்பட்டதற்குக் காரணம், அவரது அன்னையாருக்குக்கூட தெரியுமோ என்னவோ!

கூட்டணி வேட்பாளர் டாக்டர் மத்தியாஸ் வெற்றி பெற்றுவிட்டால், அந்தப் பகுதி மக்களின் நீடித்த நல்வாழ்வுக்கு வழி தேடிவிடுவார் என்ற எண்ணம் இப்போது அவரைப் புலமாகப் பற்றிக்கொண்டு விட்டிருக்கிறது!

அந்தப் பகுதியையே பாலைவனமாக்கிவிட வேண்டும் என்று விரும்பிச் செயல்பட முடிவுவெடுத்து விட்டார் என்றே எண்ணத் தோன்றுகிறது.

அதற்காகத்தான் அங்கே, அராஜகங்களை, வன்முறைகளைக் கட்டவிழ்த்துவிடத் தொடங்கி இருக்கிருர்!

அதுமட்டும் அல்ல நண்பா, கடந்த முறை சட்டமன்றத்துக்குள்ளே வரவிரும்பியவர் இந்த முறை பாராளுமன்றத்துக்குள்ளே போக விழைவானேன்?

இப்போது விரும்பினுல்கூட அவர் சட்டமன்றத்துக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு சார்பாளராக, பெருந்துறைச் சட்டமன்றத் தொகுதி காலியாகத்தான் இருக்கிறது. ஒரு இடைத்தேர்தல் நடைபெற வேண்டிய நிலை பெருந்துறைத் தொகுதிக்கு உண்டு.

கழகத்தை—நேருக்குநேர் சந்திக்கும் ஒரு அரிய வாய்ப்பு, கழகத் தலைவர்களை எதிருக்கு எதிரே சந்தித்து ஆணித்தரமான வாதங்களால், குறுக்குக்கேள்விகளால் மடக்கிப் போட்டுவிடக்கூடிய ஒரு வாய்ப்பு இதைவிட் காமராசருக்குக் கிடைப்பது அரிது.

"பார்த்தீர்களா, பார்த்தீர்களா! இன்று சட்டமன்றத்திலே, அந்த கருணுநிதியை இப்படி மடக்கினேன்; அந்த நெடுஞ்செழியனை அப்படி மடக்கினேன் பதில் சொல்ல முடியாமல் திணறினுர்கள்! ஒன்றுக்கும் உதவாக்கரைகளை அமைச்சர்கள் ஆக்கினீர்களே! அதன் பலன் தெரிகிறதா? அடுத்த 72-ல்...!" என்று பல்லவியை இழுத்து நீட்டிக்க நல்லதொரு சந்தர்ப்பம், அது!

அதனை அவர் விரும்பவில்லை. மாருக நாகர்கோயிலை விரும்புகிருர்!

ஒரு எம். பி. யாக நியமனம் பெற முடியும் என்ற நிலையிலே இருக்கின்ற அவர், நாகர்கோயில் மூலமே செல்ல விரும்புவது, மறுபடியும் அந்தப் பகுதிக்கு வேறு யாரேனும் வந்து நல்வாழ்வு தேடித்தந்துவிடக் கூடாது என்ற எண்ணமாகத்தானே நண்பா, இருக்க முடியும்?

நேசமணி ஒருவரை, பாடுபடுத்தினுலே போதும் அந்தப் பகுதியையே பாடுபடுத்தியதுபோல் என்று கருதி வந்த காமராசர், நேசமணி காலமாகிவிட்ட பின்பும், அதற்கு ஈடாக, தானே நின்று, பாழ்படுத்த விரும்புகிருர் என்றுதானே நினைக்கவேண்டியிருக்கிறது.

கழகத்தை ஒழித்துக்கட்டிவிட்டு—எதிர்த்தழித்துவிட்டு, காங்கிரசுக்குப் புத்துயிர் தரவேண்டும் என்பது அவரதுதிட்டமென்ருல், அவர் கழகத்தைச் சந்திக்க

வரவேண்டிய இடம் பாராளுமன்ற மல்ல—தமிழகச் சட்டமன்றம்!

பாராளுமன்றத்துக்குப்போக விரும்புவதன் மூலம், தொகுதியையும் பழிவாங்க வேண்டும்—வாய்ப்புக்களைத் தடுக்கவேண்டும்! நாமும் நமது அந்தஸ்தினைக் காத்துக்கொள்ளவேண்டும் என்று நம்புவானேன்?

தமிழகத்தில், காமராசரது அரசியல் செல்வாக்கு அடிமட்டத்தில் வீழ்ந்து கிடக்கிறது. அதனைப் புதுப்பித்துக்கொள்ள இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டால், தமிழகத்திலும் செல்வாக்குப் பெறலாம்—மத்தியிலும் இந்திராவை மறுபடியும் பயமுறுத்திக் கொண்டிருக்கலாம் — என்பதும் இன்னொரு விளக்கமாகத் தரமுடிகிறதே!

போகட்டும்! சமதர்மத்தத்துவத்தைக் கட்டிக்காக்க காமராசர் வெற்றிபெற்று டில்லி செல்லவேண்டுமென்றால்—

நண்பா! இப்போது டில்லியில் இருக்கின்ற காங்கிரசுக்காரர்கள் அத்தனைப்பேரும் சமதர்மப்பாதையை புதைகுழிக்கனுப்பிக் கொண்டிருக்கிறார்கள் என்று அல்லவா பொருளாகிவிடும்!

தமிழகக் காங்கிரசுக்காரர்கள் இதனை ஒப்புக்கொள்கிறார்களா? மாற்றாரின் எஜமான விசுவாசத்தை எடுத்துக்காட்டுவதன் மூலம், தன் விசுவாசத்துக்கு முத்திரை பதித்துக்கொள்வோர், தயாரா? ஒப்புக்கொள்ள முன் வருகிறார்களா?

"மத்திய அரசு, சமதர்மப்பாதையிலிருந்து நழுவிக்கொண்டிருக்கிறது; முதலாளித்துவத்துக்கு மட்டுமே எடுபிடியாக இருக்கிறது; அதனைத் தடுக்க காமராசரைத் தேர்ந்தெடுக்க வேண்டும்"

என்று வெளிப்படையாக எழுதவும், பேசவும் முன் வருவார்களா?

காமராசருக்கும், அவர் தம் சீடகோடிகளுக்கும் சமதர்ம லட்சியத்தில் நம்பிக்கையும், பிடிப்புமிருக்கிறதோ இல்லையோ, காமராசரது செல்வாக்கைக் காப்பாற்றித் தீரவேண்டும் என்பதிலே அவசியம் ஏற்பட்டிருக்கிறது. காமராசர் இன்னும் சில காலத்துக்காவது செல்வாக்கோடு இருந்தால்தான், தங்கள் வயிற்றைக் கழுவிக்கொள்ள முடியும் என்ற நிலைமை இருக்கிறது.

இந்த நிலைமை காரணமாகவே, காமராசருக்குச் செல்வாக்குத் தேடவேண்டிய நிலையை சீடகோடிகள் சென்றடைகிறார்கள்!

காமராசரோ, அதன்மூலம் அரசியல் லாபம் பெறத் துடிக்கிறார்! தன் சீடகோடிகளுக்கு வாழ்வளிக்க நினைக்கிறாரோ, இல்லையோ—தன்னை இந்த நிலைக்கு ஆளாக்கிய இந்திரா அம்மையாருக்குச் சரியான ஒரு எதிர்ப்புக்குழுவை உருவாக்க அவர் டில்லியிலிருந்தாக வேண்டியிருக்கிறது.

அடிக்கடி போய் வருவதினும், நிரந்தரமாக அங்கேயே தங்குவதுதான் சரியான பரிகாரமாகவிருக்க முடியும் என்று நம்புகிறார்.

காமராசர் காங்கிரசுக் கட்சியின் அனைத்திந்தியத் தலைவராகவிருந்த காலத்திலேயே, அவரை மதியாத இந்திரா அம்மையார் மீது ஏற்பட்டிருக்கிற ஆத்திரத்தைத் தீர்த்துக்கொள்ள காமராசர் திட்டம் போட்டுவிட்டார் என்பதற்கு இதைவிட ஒரு எடுத்துக்காட்டு இருக்க முடியாது!

இந்திரா அம்மையாரிடம், காமராசர் மதிப்புக்குரியவராகயிருந்திருந்தால் மத்திய அரசின் அமைச்சர் பட்டியலைக்கூட அவர், கட்சித்தலைவரை கலக்காமல் தயாரித்திருப்பார் என்று எண்ணமுடியுமா?

இந்திரா அம்மையாருக்குக் காமராசரிடம் சீற்றம் இருக்கிறது;

இதுபோலவே காமராசருக்கும் இந்திரா அம்மையாரிடம் காழ்ப்பு மிகுந்திருக்கிறது.

இந்நிலையிலேயே நாடாளுமன்றத்துக்குப்போய் காமராசர் அமைச்சர் பதவியை ஏற்கப்போகிறாராம்! தலைவலியை விலை கொடுத்து வாங்க இந்திரா தயாராகவிருப்பார் என்பதை ஒப்புக்கொள்வோர், யாரிருக்கிறார்கள்!

காமராசர் வெற்றிபெற்றுச் சென்று, பதவி ஏற்கிறார் என்று வாதத்துக்காக ஒப்புக்கொண்டாலும்—அப்போதும் அது இந்திராவுக்குச் சங்கடமான நிலைமைதான்! பதவி கொடுக்காமல் நாடாளுமன்ற உறுப்பினர் என்ற நிலையிலேயே வைத்திருந்தாலும் சங்கட நிலைதான்! அமைச்சராகவிருந்து அதிகாரங்களின் வலிவோடு எதிர்ப்புக்கு ஏற்பாடுகளைச் செய்யப் போகிறார்!

உறுப்பினராகச் சென்றாலும், உறுப்பினர்களோடு இணைந்து எதிர்ப்புக்கு அணி திரட்டப்போகிறார்!

மொத்தத்தில், காமராசரை டில்லியிலே வைத்துக்கொள்வதென்பது, இந்திரா அம்மையாருக்கு மட்டுமல்ல, இந்திய அரசின் ஸ்திரத் தன்மைக்குக்கூட ஊறு தேடிக்கொள்ளும் ஒரு வழியாகிப்போகும் என்பதனை காங்கிரசுக்காரர்கள் உணர்ந்துகொண்டால்தான் நல்லது! காங்கிரசின் பேரால் காமராசருக்கு 'பூசை' நடத்திக்கொண்டிருப்போர், அந்தக் காங்கிரசைக் காப்பாற்றவாவது, அந்த முயற்சியிலிருந்து மாறித் தீரவேண்டும்!

யார் மூலம் நாடு, சுபிட்சமடைய வேண்டும் என்று பிரசாரம் செய்யப்படுகிறதோ — அவர், அந்தக் காமராசர் மூலையிலே முடக்கி அமர்த்தப்படுகிறபோதுதான் நாடு சுபிட்சமடைய முடியும். ஸ்திர ஆட்சிக்கு வாய்ப்புப்பெறமுடியும் என்பதை எடுத்துக்காட்ட, காங்கிரசார் தயங்கக்கூடாது!

நாகர்கோயில் தேர்தல் என்ற ஒரே கல் மூலம் காமராசர்—

நாகர்கோயில் தொகுதி மக்களைப் பழி வாங்குதல்—

இழந்த அந்தஸ்தை மீட்டுகொள்ளுதல்—

சுப்பிரமணியனாரைவிட பெரிய தலைவர் என்பதை நிரூபித்துக் காட்டும் வழிகளை மேற்கொள்ளுதல்—

இந்திராவுக்கு எதிர்ப்புச் சக்தியை மிகுதிப்படுத்தல்—

இந்திராவின் அமைச்சரவையை மாற்றி, அவரைப் பழிவாங்கல்

முதலான கனிகளை அடிக்க முனைந்திருக்கிறார் என்பதனை, எந்த தர்மத்தைக் காட்டியும் காங்கிரசினால் மறைத்துவிட முடியாது.

கம்யூனிஸ்டுகளும் சோஷலிசம் பேசுகிறார்கள். சோஷலிஸ்டுகளும் சோஷலிசம் பேசுகிறார்கள்! காங்கிரசாரும் சோஷலிசம் பேசுகிறார்கள்! திராவிட முன்னேற்றக் கழகமும்தான் சோஷலிசம் பேசுகிறது.

நாட்டிலே அனைத்து அரசியல் கட்சிகளும் சோஷலிச சித்தாந்தத்தை ஒரு கொள்கையாகத்தான் கொண்டிருக்கின்றன.

எனவே, காமராசர் மட்டுமே சோஷலிசத்தைக் கொண்டுவரப்போகிறார் என்றால், கடந்த 20 ஆண்டுக் காலத்தில் அதனைத் தீவிரமாகச் செயல் படுத்தாதது மட்டுமல்லாமல்—அதனைக் கேலி பேசியும் வந்த நிலைகள், வரலாற்றில் இடம்பற்றி இருப்பதனை காமராசர் மறுத்துத் தீரவேண்டும்!

காமராசரும் காங்கிரசாரும் எதனை மறுக்கப் போகின்றனர்.

இந்திரா அம்மையாரை எதிர்க்கப்போவதில்லை—என்பதனையா?

மத்திய அரசின் ஸ்திரத்தன்மைக்கு ஊறுண்டாக்கப் போவதில்லை—என்பதனையா?

வலிமைப் போட்டியில், சுப்பிரமணியனாரிடம் தான் தோல்வியடைந்துவிடவில்லை—என்பதனையா?

இழந்த அந்தஸ்தனை மீட்டுக்கொள்ளவேண்டிய அவசியத்தில் இல்லை—என்பதனையா?

நாகர்கோயில் பகுதி மக்களைப் பழிவாங்கியதில்லை—என்பதனையா?

அல்லது அனைத்தையுமா?

அவர், எதனையும் மறுக்கப் போவதில்லை, நண்பா! ஏனென்றால் அவருக்கு அவசரமாக டில்லிபோக வேண்டிய வேலை இருக்கிறது! அதனை நிறைவேற்றிக் கொள்ள காலிகளையும் கூலிகளையும் நம்பிக்கொண்டிருக்க வேண்டியிருக்கிறது. அராஜகத்தையும், வன்முறைகளையும் கட்டவிழ்ந்துவிட வேண்டியிருக்கிறது, இதிலே செலுத்திக் கொண்டிருக்கிற சிந்தனையை, வேறு பக்கம் செலுத்த அவர் தயாராகவில்லை.

அதனால் நண்பா, காமராசரின் இதயத்தை எடுத்துக்காட்டிவிடவேண்டிய பொறுப்பு, எனக்கும் உனக்கும் ஏற்பட்டுவிட்டது! தக்கபடி எடுத்துக்காட்டு! நாகர்கோயில் தொகுதி மக்கள் விழித்தெழும்வரையில் எடுத்துக்காட்டு! டாக்டர் மத்தியாசின் வெற்றிச்செய்தி எட்டும் வரையில் எடுத்துக்காட்டு!

'காமராசரே போட்டியிடுவார்' என்ற ஏகார விளம்பரத்தோடு போட்டுயிடும் காமராசரது தோல்வியில் தான்—மேலே எடுத்துக்காட்டிய அனைத்துக் கொடுமைகளும் களைந்தெறியப்பட வேண்டும் என்பதனையும் எடுத்துக்காட்டு! காங்கிரசைக் காக்கவாவது, காமராசர் தோற்கடிக்கப்படவேண்டும் என்று எடுத்துக்காட்டு!

அன்புள்ள,

திருவாரூர் முத்துராமன்

---

11-ம் பக்கத் தொடர்ச்சி

பெருக, தொழிற் சங்கங்களும் பெருகலாயின. தொழிற் சங்கங்கள் தொழிலாளரின் உரிமைகளுக்காகப் போராடும் கருவிகளாயின.

19—ஆம் நூற்றாண்டில், ஐரோப்பிய ஏகாதிபத்திய நாடுகளால் அடிமைப்படுத்தப்பட்டு வந்த ஆசிய, ஆப்பிரிக்க நாடுகள் அரசியல் விடுதலை கோரி ஏகாதிபத்தியங்களை எதிர்த்துப் போராட்டங்களில் ஈடுபடலாயின. முதல் உலகப் போரின் முடிவில் ரஷியாவில் சாரிஸக் கொடுங்கோல் ஆட்சி தூக்கி எறியப்பட்டு சமதர்மக் குடியாட்சி நிறுவப்பட்டது. ரஷியாவில் புதிதாக அமைக்கப்பட்ட தொழிலாளி வர்க்க அரசு, உலகெங்குமுள்ள தொழிலாளர் இயக்கத்துக்குப் புத்துணர்ச்சியையும், புதிய எழுச்சியையும் உண்டாக்கியது. தொழிலாளர்கள் வெறும் அரசியல் உரிமைகள் பெற்றுவிடுவதால் மட்டும் பயனில்லை. அவற்றை முழுதும் துய்ப்பதற்கு வேண்டிய பொருளாதார உரிமைகள் பெற்றாக வேண்டும் என்ற உண்மையை உணர்ந்தனர். ஏழைத் தொழிலாளிக்குப் பேச்சுரிமையும், கூட்டம் கூட்டும் உரிமையும் அளிக்கப்பட்டிருக்கிறது என்று சொல்வது கேலிக்கூத்தாகும். அத்தொழிலாளிக்கு கல்வி பெறும் வாய்ப்பும், பொதுவாழ்வில் பங்கு பெறுவதற்கான ஓய்வும் அளிக்கப்பட்டால் தான் அவற்றை அவன் பயன்படுத்த முடியும். அதைப் போலவே, ஏழைக்கு வாக்குரிமை அளித்து விடுவதனாலே மட்டும் பிரச்சினை தீர்ந்துவிடவில்லை. அவன் வறுமை, பசிக்கொடுமை காரணமாக விலை மதிக்க முடியாத வாக்குரிமையை ஐந்துக்கோ அல்லது பத்துக்கோ விற்றுவிடலாம். அதனால் ஏழைக்கு அரசியல் உரிமைகள் வழங்கிவிடுவதால் மட்டும் பயனில்லை. அவற்றைப் பயன்படுத்தத்தக்க பொருளாதார உரிமைகளும் வழங்கப்பட்டாக வேண்டும் என்ற உணர்வு உலகெங்கும் பரவி அதற்கான கிளர்ச்சிகளும் நடைபெற்றன.

இரண்டாவது உலகப் போரின் முடிவில், உலகில் மனித உரிமைகளைக் கட்டிக் காப்பதற்கு என்று ஒரு நிரந்தர அமைப்பு இருக்க வேண்டுமென்று உலகத் தலைவர்கள் ஒருமுகமாகத் தீர்மானித்தனர்.

1945-ல் ஐ. நா. சாஸனம் கையெழுத்தாயிற்று. ஐ. நா. சபையின் சமூக, பொருளாதார கவுன்சிலின் ஆதரவில் திருமதி எலியனார் ரூஸ்வெல்ட் தலைமையில் 18 பேர் கொண்ட மனித உரிமைக் கமிஷன் அமைக்கப் பெற்றது.

மனித உரிமைப் பிரச்சினை மூன்று அம்சங்களைக் கொண்டதாக இருக்க வேண்டும்என்று அக்கமிஷன் முடிவு செய்தது. ஒன்று, மனித உரிமைப் பிரகடனம். இரண்டாவதாக மனித உரிமைகள் பற்றிய உடன்பாடு, மூன்றாவதாக, அவற்றை அமுல் செய்வதற்கான நடவடிக்கைகள் பற்றியவை,

1948 டிசம்பர் 10 ஆம் நாள் மனித உரிமைப் பிரகடனத்தை ஐ. நா. பொதுச்சபை ஒப்புக்கொண்டது. மனித உரிமைப் பிரகடனத்தில் 30 அம்சங்கள் உள்ளன. முதலிரண்டு அம்சங்கள் கூறுவதாவது:

கண்ணியம், உரிமைகள் ஆகியவற்றில் சமமாகவும் சுதந்திரமுள்ளவர்களாகவும் எல்லா மானிடர்களும் பிறக்கிறார்கள். அவர்கள் பகுத்தறிவும், மனச்சாட்சியும் படைத்தவர்கள். சகோதர உணர்ச்சியுடன் ஒருவர்பால் ஒருவர் நடந்து கொள்ளவேண்டியவர்கள்.

இனம், நிறம், பால், மொழி, மதம் அரசியல், அல்லது வேறு கருத்து, தேசீய சமூக நலங்கள், சொத்து, பிறப்பு, அல்லது வேறு அந்தஸ்து என்ற எல்விதமான பாகுபாடுமின்றி இந்தப் பிரகடனத்தில் செப்பியுள்ள எல்லா உரிமைகளையும், சுதந்திரங்களையும் அனுபவிக்கும் உரிமை ஒவ்வொருவருக்கும் உண்டு.

ஐ. நா. வின் உரிமைப்பிரகடனம் ஒவ்வொரு நாட்டிலும் எல்லோருக்கும் தெரிந்திருப்பது அவசியம். அவை தாம் ஜனநாயகத்துக்கு உரைகல்லாக இருப்பவை. அரசின் ஒவ்வொரு செயலையும் அதன் அடிப்படையில்தான் மக்கள் மதிப்பிடுவர்.

★

# காஞ்சி பொங்கல் மலர்

## கருத்துக்கு நல்விருந்து

நெஞ்சை அள்ளும்
சிறுகதைகள்
தெளிவளிக்கும்
கட்டுரைகள்
இன்சுவை மிகு
கவிதைகள்

பொங்கல் மலர்

முல்லை மணம்
முக்கனிச் சாறு
முத்துப்பேழை

கருத்துச் சோலையில் உலவிட!
முத்தமிழ்ச் சுவை பருகிட!



அளித்திடும்
**படைப்புகள்**
நிறைந்த
அறிவுப் பெட்டகம்

## காஞ்சி பொங்கல் மலர்

தேவை குறித்து இன்றே தெரிவித்திட வேண்டுகிறோம்

**விலை 1–50**

ஆசிரியர், வெளியிடுபவர் சி. என். ஏ. இளங்கோவன் அவர்களால், காஞ்சிபுரம்–8
85, திருக்கச்சிநம்பி தெரு, அல்லி அச்சகத்தில், அச்சிட்டு வெளியிடப்படுகிறது.